திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

ஜீன் 2021..... விலை ரூ.5/-



**திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்**

**2021, ஜீன் 22 முதல் 24 வரை**



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# கார்வேடி நகரம்
# ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி
# பிரம்மோத்ஸவம்
## 2021 ஜீன் 02 முதல் 10 வரை

**02-06-2021 புதன் கிழமை**
பகல் : துவஜாரோஹணம் – இரவு : பெரிய சேஷ வாகனம்

**03-06-2021 வியாழக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம் – இரவு : ஹம்ஸ வாகனம்

**04-06-2021 வெள்ளிக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம் – இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**05-06-2021 சனிக்கிழமை**
பகல் : கல்ப விருக்ஷ வாகனம் – இரவு : சர்வபூபால வாகனம்

**06-06-2021 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : மோகினி அவதாரோத்ஸவம் – இரவு : கருட வாகனம்

**07-06-2021 திங்கட்கிழமை**
பகல் : அனுமத் வாகனம் – இரவு : யானை வாகனம்

**08-06-2021 செவ்வாய்க்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம் – இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**09-06-2021 புதன் கிழமை**
பகல் : திருத்தேர் – இரவு : குதிரை வாகனம்

**10-06-2021 வியாழக்கிழமை**
பகல் : சக்கர ஸ்நானம் – இரவு : துவஜாரோஹணம்


*யோத்ஸ்யமாநாநவேக்ஷேऽஹம்*
*ய ஏதேऽத்ர ஸமாக$_3$தா: |*
*த$_4$ார்தராஷ்ட்ரஸ்ய து$_3$ர்பு$_3$த்தே$_4$ர்-*
*யுத்$_3$தே$_4$ ப்ரியசிகீர்ஷவ: ||*



**தீய புத்தியுடைய துரியோதனனுக்கு யுத்தத்தில் நலனைச் செய்ய விரும்பி, எந்தெந்த அரசர்கள் இந்தப் படையில் வந்து கூடியிருக்கிறார்களோ, போர் புரியப் போகிற அவர்களை நான் பார்க்கிறேன்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1-23*





*நாதே$_2$ந முநிநாதே$_2$ந ப$_4$வேயம்*
*நாத$_2$வாநஹம் |*
*யஸ்ய ஸநக$_3$மிகம் தத்த்வம்*
*ஹஸ்தாமலகதாம் க$_3$தம் ||*

**எவருக்கு வேதாந்த விழுப்பொருளான பரப்$_3$ரஹ்மம் கையிலங்கு நெல்லிக்கனியாயிற்றோ, அந்த முனிவர் தலைவரான நாத$_2$முனிகளாலே அடியேன் நாத$_2$னுடையவனாகக் கடவேன்.**

- வேதாந்த தேசிகர்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி. தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

## திட்டத்தின் நோக்கங்கள் :

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம்படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர்ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவிகளை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக்கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சாயத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர்வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதிநவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம்பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மணமக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலாபம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

## ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப்படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் - "செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூன் 2021

மலர் 52
இதழ் 01


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| வளம் தரும் அனுமன் வழிபாடு - திரு. ஜி. வேலாயுதம், சேலம். | 7 |
| தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன் - திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி. | 8 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் : பாதிரிப்பூச்சூட்ட வாராய்! - பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 10 |
| ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : வீர்யவான் - திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை. | 14 |
| மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்... - ஸ்ரீ. உ.வே.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவரங்கம். | 15 |
| நாலாயிரம் பெற்ற நாதமுனிகள் - திரு. எஸ்.ஸ்ரீதுரை, வேலூர். | 18 |
| கீதையும் ஜோதிடமும் -முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, திருவல்லிக்கேணி. | 22 |
| திருப்பல்லாண்டு - அமரர் முனைவர் இரா.வ. கமலக்கண்ணன், காஞ்சிபுரம். | 24 |
| திருவேங்கடவன் திருலீலைகள்: திருவேங்கடவனின் திருவருள் - திரு. ச.மு. சந்த்ரசேகர், புதுச்சேரி. | 31 |
| அனந்தமங்கலம் ஸ்ரீதிரிநேத்ர தசபுஜ வீர ஆஞ்சநேயர் - திரு. நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம். | 32 |
| யோக சாஸ்திரம் : பதஞ்சலியின் ஆரோக்கிய ஆசனங்கள் - டாக்டர் கி.ஜ. நிகிலாவெங்கட், கோயம்பத்தூர். | 34 |
| பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள் : ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம் - உ.வே. டாக்டர். அனந்தபத்மநாபாசாரியார் ஸ்வாமி, சென்னை. | 37 |
| 108 திவ்வியதேச வைபவம் – திருக்கூடல் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 39 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 43 |
| ஆயுர்வேதம் : சுரக்காய் - திருமதி உஷா, திருப்பதி. | 45 |
| ஸ்ரீமத் பகவத்கீதை - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 47 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : கைகேயி - திரு. சத்யதாரா, சென்னை. | 49 |
| நீதிக்கதைகள் : சிறந்த கொடையாளி யார்? - செல்வி. எஸ். ஜெயஸ்ரீ, இளையாண்டிபண்டு. | 51 |
| சித்திரக்கதை : பால அனுமன் | 52 |



சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. ஜவஹர் ரெட்டி, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
பேராசிரியர் K. ராஜகோபாலன், பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360



நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம், திருமலை.

பின்னட்டை : ஜாபாலி ஆஞ்சநேயர், திருமலை.

உங்களுடன்...





# பாரம்பரிய வழிமுறையில் ஸ்வாமிக்கு நைவேத்தியங்கள்

பாரதத் திருநாடு ஒரு ஆன்மீக பூமியாகும். இந்த ஆன்மீக பூமியில் அனாதிகாலம் தொட்டே பாரம்பரியமான பழக்கவழக்கங்களை கடைபிடித்து வந்துள்ளனர். அதோடு பாரம்பரிய இயற்கை முறையில் உணவை உற்பத்தி செய்து, அதன் மூலம் ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தனர். நோய் இன்றி வாழ இறைவனால் வழங்கப்பட்ட வரப்பிரசாதமே பாரம்பரிய உணவு முறையாகும். அன்றைய விவசாயத்தில் இயற்கை உரங்களாகன தழை சத்து, மணி சத்து, சாம்பல் சத்து என்று இலை, தழை மற்றும் மாட்டுச் சாணங்களை பயன்படுத்தினர். அதன் மூலம் உணவு உற்பத்தி செய்து ஆரோக்கியமாக வாழ்ந்தனர். ஆரோக்கிய உணவுகளையே நம் தமிழர் காலம் காலமாக உட்கொண்டனர் என்பதை சங்க இலக்கியங்களின் மூலமாகவும் நாம் அறிய முடிகிறது.

ஸ்ரீகிருஷ்ண பகவான் *"எனக்கு இலை, மலர், பழம், நீர் முதலியவற்றை தூய பக்தியுடன் அர்ப்பணம் செய்தால் அதனை நான் ஏற்கிறேன்"* (கீதை 26) என்கிறார். அதாவது இயற்கை வளங்களை மாசுபடுத்தாமல் அவற்றோடு ஒன்றிணைந்து வாழ்ந்து இறைவனுக்கு நன்றி கூறுதல் வேண்டும். அன்றைய மக்களும் இறைவனுக்கு இயற்கை வழிமுறையில் உற்பத்தி செய்த உணவுகளையே படைத்து வந்தனர். இதனை ஔவை மூதாட்டியும் *"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலும் கலந்து உனக்கு நான் தருவேன்"* என்று இறைவனுக்குப் படைக்கப்படும் உணவினை பட்டியலிடுகிறார். ஆண்டாளும் *"நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன் நூறு தடா நிறைந்த அக்கார வடிசில் சொன்னேன்"* என்று நாச்சியார் திருமொழியில் இறைவனுக்கு சமர்ப்பிப்பதாகப் பாசுரமிடுகிறார்.

*"உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்"* என்று நம்மாழ்வார் குறிப்பிடுவது போன்று அன்றைய மக்கள் உணவு உற்பத்தி செய்யும்போது இறைவனை வணங்கியும், இறை நாமத்தை சொல்லியும், உற்பத்தியான உணவை இறைவனுக்குப் படைத்தும், உணவை உண்ணும்போது இறைவனையே நினைத்தும் வாழ்ந்து வந்தனர். அவை இறை மனம் கமழும் உணவாகவும் திகழ்ந்து, தெய்வீகமும் நிறைந்து, ஆரோக்கியமும் வந்தது. அதுமட்டுமின்றி அந்த உணவு முறையால் வாழ்க்கையின் ஆயுட்காலமும் அதிகரித்து இருந்தது. ஆனால் தற்பொழுது செயற்கையான இரசாயண உரங்கள் பயன்படுத்துவதால் நிலமும் மாசடைந்து அதில் விளையும் உணவுகளினால் ஆரோக்கியமும் குறைந்தது. ஆயுட்காலமும் குறைந்தது. *"தீதும் நன்றும் பிறர் தர வாரா"* என்பது போல இந்த செயற்கை உரங்களும் கொடிய தொற்று நோய்களுக்கு ஒரு காரணமாக அமைகின்றன.

எனவே மீண்டும் நாம் அன்றைய இயற்கை விவசாயத்திற்கு திரும்புதல் வேண்டும். அந்த வகையில் தற்பொழுது திருமலை திருப்பதி தேவஸ்தானம் சுமார் நூறு வருடங்களுக்குப்பிறகு பாரம்பரிய வழிமுறையில் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களையும், நாட்டு மாடுகளின் மூலமாகக் கிடைக்கின்ற பால், தயிர், வெண்ணெய் போன்ற பொருட்களையும் கொண்டு திருவேங்கடமுடையானுக்கு பிரசாதங்கள் செய்ய வழிவகை செய்துள்ளது. இன்றைய கொரோனா தொற்றிலிருந்து மீள நாம் விழிப்புணர்வோடு பாரம்பரிய வழிமுறையில் இயற்கையை சார்ந்த உணவு பொருட்களையே உண்டு ஆரோக்கியமாக வாழ்வோம். நம் எதிர்கால சந்ததியினரையும் ஆரோக்கியமாக வாழ வழிவகுப்போம்.

இயற்கையை காப்போம்! இயற்கையோடு ஒன்றியிருப்போம்!! ஆரோக்கியமாக வாழ்வோம்.

# வளம் தரும் அனுமன் வழிபாடு

அனுமன் கலியுக மக்களைக் காப்பவராக கருதப்படுகிறார். இவரை மனதார நம்பிக்கையுடன் வணங்கினால், அனைத்து விதமான பிரச்சனைகளில் இருந்தும் நம்மைக் காப்பார். இவர் பொதுவாக குங்குமப்பூ நிறத்தில் சித்தரிக்கப்படுவார். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று இந்த செந்தூர நிறம், உயிராற்றலின் நிறம். மற்றொன்று, ஒரு நாள் சீதை தன் நெற்றி உச்சியில் செந்தூரத்தை தடவினார். அதைக் கண்ட அனுமன் சீதையிடம் ஏன்? என்று கேட்டார். அதற்கு சீதை, "இது இராமபிரான் நீண்ட காலம் செழிப்பாக இருக்க அவரை ஆசீர்வதிக்கும் வகையில் செய்யும் ஓர் செயல்" என்று கூறினார். இதைக் கேட்ட அனுமன் உடனே தன் உடல் முழுவதும் இந்த செந்தூரத்தை தடவிக் கொண்டார்.



செவ்வாய்க் கிழமைகளில் அனுமனுக்கு துளசி மாலையை அணிவித்து வணங்குவது நல்லது. பின் அந்த துளசி இலைகளை சாப்பிடலாம்.

முக்கோண வடிவமுள்ள சிவப்பு கொடியில் "ராம்" என்று எழுதி, அனுமனுக்கு படைத்து வணங்கி அந்தக் கொடியை வாகனங்களின் முன் மாட்டிக் கொண்டால் விபத்துக்களில் இருந்து விலகி இருக்கலாம். அதுவே வீட்டில் வைத்திருந்தால், வீட்டில் பணம் கொழிக்கும்.

அனுமனுக்கு ஆரஞ்சு நிற செந்தூரம் வைக்க வேண்டும். இப்படி தொடர்ச்சியாக செய்து வருவதன் மூலம், மாங்கல்ய தோஷம் நீங்குவதோடு இதர தோஷங்களும் அகலும்

மல்லிகை எண்ணெய் மன நிலையை மேம்படுத்த உதவும். செந்தூரப் பொடியை மல்லிகை எண்ணெய்யுடன் சேர்த்து கலந்து, அனுமனுக்கு திலகமிடுவது இன்னும் நல்லது.

செல்வாய்க் கிழமைகளில் அனுமனுக்கு லட்டு, சுண்டல், வெல்லம், கொய்யாப்பழம் போன்றவற்றை படைத்து வணங்கி னால், அனுமனின் முழு ஆசிர்வாதமும் கிட்டும்.

– திரு. ஜி. வேலாயுதம், சேலம்.

சென்ற இதழின் தொடர்ச்சி...

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்

**கனகதாசர் கீர்த்தனைகளில் திருவேங்கடவனின் பெருமை :**

கனகதாசர் கன்னடத்தில் மோகனதரங்கினி, நள சரித்திரம், ஹரிபக்திசார என்ற நூல்களை இயற்றியுள்ளார். வியாசதாசரின் திவ்ய போதனைகளைக் கேட்டு ஹரிதாசர் ஆனார்.

*“நம்மம்ம சாரதெ உமா மகேஸ்வரி”, “இஷ்டுதின ஈ வைகுண்ட எஷ்டு தூரவோ,” “ஏனு காயங்கள நளிது எம்பத்து நால்கு லக்ஷ ஜீவராசியன்னு”, “முட்டபேடா முட்டபேடா, பரம புருஷ நீ நெல்லிக்காயி, பஜிசிபது கெலோ மானவ, ‘‘தல்லணி சதிரு கொண்ட்ய தாளுமனலே’’* போன்றவை கனகதாசரின் புகழ் பெற்ற கீர்த்தனைகள் ஆகும்.

இவருக்கு ஸ்ரீநிவாசர் கனவில் தோன்றி பிரம்மோத்சவத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தாராம். ஸ்ரீநிவாசரைக் காண கனகதாசரும் திருமலைக்குப் புறப்பட்டாராம்.

அப்போது ஸ்வாமியின் வேண்டுகோளின்படி கனகதாசரை சகல மரியாதையுடன் வரவேற்க மஹந்து தேவஸ்தான அதிகாரிகள் மலையிலிருந்து இறங்கி வர, இவரும் எதிரே வர அவரை கண்டுபிடிக்க முடியாமல் போயிற்று. அவர் எளிமையான தோற்றத்தைக் கொண்டவர், ஆகையால் இவரை அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஆடம்பரமற்றவர், கர்வமற்றவர், தன்னலமற்ற மனதை உடையவரான இவர் தியானித்துக் கொண்டு, மலைக்கு வந்து, குளிருக்கு நடுக்கமுற்று பசியால் வருந்தி ஓரிடத்தில் இருளில் அமர்ந்திருந்த போது, எம்பெருமான் ஒரு மனிதர் உருவில் தோன்றி பிரசாதம் மற்றும் போர்த்திக் கொள்ள பட்டு வஸ்த்திரம் தந்து சென்றாராம்.

இவர் ஸ்ரீநிவாசருக்கு ஓர் தாலாட்டுப் பாடல் பாடினாராம். அது 5 சரணங்களைக் கொண்டது.

அப்பாடலின் பல்லவி

*“லாலி பாவன சரண லாலி அபஹரண!*
*லாலி வேங்கட ரமணலலித கல்யாண!!*

**விஜயதாசர் போற்றிய வேங்கடவன் :**

ஒரு நாள் இரவு கனவில் விஜயதாசர் உத்சவ மண்டபத்தில் அமர்ந்து இருந்த போது பக்தர்களால் வணங்கப்பட்டு கொண்டிருக்கும் பக்தவத்சலனான திருவேங்கடவனை ஸ்ரீநிவாசனை பிரம்மர், ருத்ரர் மற்றும் ருஷிகளும் துதித்துக் கொண்டிருந்தனர்.

*“சகல பூஷிதனாகி அஜஹர சுரமுனி...”* இவ்வாறிருக்கையில் விஜயதாசர் அந்த மண்டபத்தினுள் நுழைந்தவுடன் ஸ்வாமியின் அருட்பார்வை இவர் மீது பட்டு ஸ்வாமி தம் அருகே அழைத்தார்.

*“நால்வத்து மூரு பதங்களு மாடெந்து....”* நாற்பத்து மூன்று சொற்களை என் மேல் இயற்றுமாறு கூறிய





மேரு பர்வதம் போன்றவரான ஸ்ரீநிவாசர் தம்பூராவை என் கையில் கொடுத்து, தன் கரத்தை என் தலைமேல் வைத்து அருள் புரிந்தார். பின்னர் பல்லக்கில் ஆலய பிரகாரத்தை வலம் வந்து ஆலயத்திற்குள் நுழைந்தாராம்.

*"வார சனி சதுர்த்தசி கிருஷ்ண புஷ்யதி!..."* ரௌத்ரி வருடம் தை (புஷ்ய) மாதம் தேய்பிறை சனிக்கிழமை நள்ளிரவு அன்று தம் குருவான புரந்தர தாசரின் உபதேசத்தால் ஸ்ரீ விஜய விட்டலரின் திருவடிகளைக் கண்டு மகிழ்ந்தார்.

ஸ்ரீ விஜயதாசர் ஸ்வாமியின் அனுக்கிரகத்தால் திருமலையை அடைந்து மலையின் அழகையும், ஏழுமலையானையும் தரிசித்து தம் கீர்த்தனைகளால் மெய்மறந்துப் பாடினார்.

திருமலையைப் பார்த்து, தெலுங்கில் அன்னமய்யா *"அதிவோ அல்லதிவோ ஸ்ரீ ஹரிவாசமு"* என்று பாடியது போன்று, இவரும் *''நோடிதே நாறுநோடிதெ''* என்ற கீர்த்தனையைப் பாடினார். "கண்டேன் நான் கண்டேன் ஸ்ரீநிவாசனின் திவ்ய சன்னிதானத்தைக் கண்டேன்" என்று பாடினார்.

**பண்பாட்டு ஆடை**

- ⇨ திருமலையானின் வி.ஜ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ⇨ ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- ⇨ பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/பஞ்சாபி டிரஸ்–சுடிதார்.

*"பெட்டன கண்டேனு சோபாங்களு,*
*நிட்டு சுரிக்கதே ஏரிதே"*

முதலில் மலையைக் கண்டேன். அதன் பின்னர் அதன் அழகைக் கண்டேன். பின் தியானம் செய்துவிட்டு மலைப்படிகள் ஏறினேன். காலி கோபுரத்தைக் கண்டேன். அவ்விடத்தை சென்றடைந்தேன்.

*ஈ சம்ஸ்த்ர குருவாத பாரதீசன பாதக்*
*கெரகிதே ||*
*க்ளேசவகாளிது எதுராகி பொளெவ!*
*ஸ்ரீசனகுடி மஹத்வாரவ நோடிதே ||*

திருமலையை அடைந்து பேடி ஆஞ்சநேயரின் பாதங்களை வணங்கி பின் திரும்பிப் பார்த்தால் பக்தர்கள் வேண்டும் வரங்களைத் தந்தருளும் திருவேங்கடவனின் ஆலய மஹாத்வாரத்தைக் கண்டேன்.

*பலவாகி பந்து ஸ்வாமி பஷ்கரிணி!*
*ஔகெ வரஹான நோடிதெ*
*ஜலதலி மிந்து வேகதலி! திருவேங்கள*
*தேவன நோடசாகிதெ!!"*

திருவேங்கடமுடையான் ஆலயத்தின் அருகே உள்ள புஷ்கரணி மற்றும் அங்குள்ள வராஹ ஸ்வாமியைக் கண்டேன்.

அந்த ஸ்வாமியின் புஷ்கரணியில் நீராடி உற்சாகத்துடனும், பக்தியுடனும் வேகமாகச் சென்று திருவேங்கடவனைக் காண முயன்றேன்!

ஆலயத்தின் உள் நுழைந்து கருட கம்பத்தைக் கண்டேன். அங்கு நிராசையுடன், வாழ்கையில் பல இன்னல்களால் அனைத்தும் இழந்து, தான் இப்பிறவியில் செய்த பாவத்தை நீக்கி அருள்புரிய வேண்டும் என்றும், நீயே கதி என்றும் வணங்குகின்ற வைஷ்ணவர்களையும், அவர்களுக்கு எம்பெருமான் அருள் புரிவதையும் கண்டேன்.

தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா

தொடரும்...




# பாதிரிப்பூச்சூட்ட வாராய்!

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

ஆழ்வார்களில் பெரியாழ்வார் வித்தியாசமானவர். அதனால் தான் அவர் பெரியாழ்வார். மற்றவர்களுக்கு எம்பெருமானிடத்தில் பரிவு என்றால் பெரியாழ்வாருக்கு பொங்கும் பரிவு.

அவருக்கு எங்கு பார்த்தாலும் கண்ணன் தான். எதைப் பார்த்தாலும் கண்ணன் தான். கண்ணனுக்குப் பிள்ளைத் தமிழ் பாடிய பெருந்தகை அல்லவா அவர்.

இங்கே வேங்கட வாணனான மலையப்ப சுவாமியைக் கண்ணனாகக் கருதி, அந்த வண்ணக் கண்ணனுக்கு சிங்காரப் பூச்சூட்ட, சீர் தமிழிலே அழைக்கும் பாடல்தான் இந்தப் பாசுரம்.

*"மச்சொடு மாளிகை ஏறி மாதர்கள் தம்*
*இடம் புக்கு*
*கச்சொடு பட்டைக் கிழித்து காம்பு துகில்*
*அவை கீறி*
*நிச்சலும் தீமைகள் செய்வாய் ! நீள்*
*திருவேங்கடத்து எந்தாய்*
*பச்சைத் தமனகத்தொடு! பாதிரிப் பூச்*
*சூட்ட வாராய்"*

இந்தப் பாசுரத்தில் கிருஷ்ணாவதாரத்தில் நடந்த ஒரு நிகழ்வைச் சொல்லி. அந்தக் கண்ணன் தான் இந்த திருவேங்கடத்தில் உறைகின்ற வண்ணன். அந்த வண்ணனை "என்னுடைய தந்தையே" என்று அழைத்து பசுமையான மருக்கொழுந்து பூக்களோடு பாதிரிப்பூவையும் சேர்த்து வளையமாகக் கூந்தலில் சூடும் படியாக வைத்திருக்கிறேன். நீ வந்து சூட்டிக் கொள்ள வேண்டும் என்று அழைக்கின்றார்.

வேங்கட வாணனை கண்ணன் என்று ஆழ்வார் பாடுவதில் சில ரசங்கள் உண்டு. திருவேங்கடம் எழில் கொஞ்சும் மலை. எங்கு பார்த்தாலும் பசுமை. எங்கு பார்த்தாலும் மரங்கள். நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ என்று பல வகையான மலர்கள் பூத்துக் குலுங்கும் அருமையான நந்தவனம் தான் திருவேங்கடம்.

நம்மாழ்வார் *"சிந்து பூ மகிழும் திருவேங்கடம்"* என்றுதான் திருவேங்கடத்தை மங்களாசாசனம் செய்கின்றார்.

திருவேங்கடத்தில் பூக்களுக்கு பஞ்சமில்லாமல் ஆங்காங்கே பூத்துக் குலுங்கி நிற்கின்றன. “இன்று எம்பெருமான் தோள்களிலே யார் சென்று சேர்வது?” என்று ஒவ்வொரு பூவும் தவம் செய்கின்றன. அதில் சில புண்ணியப் பூக்களுக்கே வாய்ப்பு கிடைக்கிறது. மற்ற பூக்கள் மண்ணில் விழுந்து மரித்துப் போனாலும் புண்ணிய வாய்ப்பைத் தேடி மறுபடியும் பூக்கின்றன.

அப்படிப்பட்ட திருமலையில் பூவுக்குப் பஞ்சமில்லை. அந்தப் பூக்களை சூடுவதற்காக வேங்கட வாணனை கண்ணனாக அழைக்கும் பெரியாழ்வாரின் தமிழுக்கும் பஞ்சமில்லை.

பொதுவாகவே நாம் பகவானுக்குப் பூக்களை எடுத்துக் கொண்டு சென்று சூட்டுகிறோம். ஆனால், ஆழ்வார் வேங்கடவாணனை பாதிரி பூச்சூட்ட வாராய் என்று தம் இடத்துக்கு அழைக்கின்றார்.

கண்ணனுடைய நடை அழகைக் காண்பதற்காக அழைக்கிறார். ஓடோடி வாராய் என்று ஆசையோடு அழைக்கிறார். அந்த ஆசையின் ஓசையை பாசுரத்தின் கடைசி வரியில் காணலாம்.

குறும்புகள் செய்வது குழந்தைகளுக்கு அழகு. சில நேரங்களில் அந்தக் குறும்புகள் சற்று வரம்பு மீறினாலும் பெரியோர்கள் பெரும்பாலும் அதை ரசிக்கவே செய்கிறார்கள். இங்கே கண்ணன் அவதாரத்தில் இருக்கக்கூடிய மிகப்பெரிய சிறப்பு இந்த வரம்பு மீறல் தான். அதுதான் அழகு.

அனந்தனின் அலகிலா விளையாட்டில் விதிமீறல்கள் தான் விதிகள். ஆம். அவன் ஓயாத விளையாட்டு விளையாடிக் கொண்டிருப்பவன். அதனால் தான் இந்த உலகத்துக்கே லீலைகள் செய்கின்ற லீலா விபூதி என்று பெயர்.

இந்த லீலா விபூதியில் இந்த விளையாட்டை செய்வதற்காகத் தானே அவன் நித்ய விபூதியில் இருந்தே வந்திருக்கின்றான். அந்த விளையாட்டு தீர்வதில்லை. அவன் யாரிடம் மீறினானோ அந்த ஆயர்குல பெண்கள் தவ சீலர்களைவிட பெருமை பெற்றவர்களல்லவா.

கண்ணனின் பிள்ளைக் குறும்புகளை பின்னால் எத்தனையோ கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள். இன்னும் பாடுவார்கள்.



இப்போது ஆழ்வார் பாசுரத்திற்கு வருவோம். மேல்மாடங்களில் ஏகாந்தமாக இருக்கும் பெண்களிடத்திலும் சென்று அவர்களுடைய கச்சுகளையும் பட்டாடைகளையும் கரைகட்டின சேலைகளையும் கிழித்துத் தீம்பு செய்வதை விட்டு விட்டுப் “பூச்சூட வாராய்” என்று அழைக்கிறார். போதும் போதும் நீ செய்யும் தீமைகள். (உலகியலில் பகவான் நமக்குத் தீமை என்று நினைப்பது ஆன்மிகத்தில் நன்மை என்று பொருள் படும்).

அந்தக் கண்ணன் தான் இப்போது திருவேங்கடத்தில் என்னுடைய தந்தையாகவும், தயாபரனாகவும் எழுந்தருளியிருக்கிறான்.

அது சரி; கிருஷ்ணாவதாரத்தில் திருவேங்கடம் என்கிற திவ்ய தேசம் இருந்ததா என்கிற கேள்வி எழலாம்.

இராமாவதாரத்திலே திருமலை திவ்ய தேசம் இருந்தது. கம்பன் ஒரு அழகான பாடலிலே சுக்ரீவன் மூலமாகக் காட்டுவார். சீதையைத் தேட தென்திசை போகும் வானரங்களிடம் சுக்ரீவன் சொல்வார்.

*“வட சொற்கும் தென் சொற்கும் வரம்பு ஆகி,*
*நான் மறையும், மற்றை நூலும்,*
*இடை சொற்ற பொருட்டு எல்லாம் எல்லை ஆய்,*
*நல் அறிவுக்கு ஈறு ஆய், வேறு*
*புடை சுற்றும் துணை இன்றி, புகழ் பொதிந்த*
*மெய்யேபோல் பூத்து நின்ற*



*அடை சுற்றும் தண் சாரல் ஓங்கிய வேங்கடத்தில்*
*சென்று அடைதிர் மாதோ;"*

வட திசை மொழிகளுக்கும் தென்மொழியாகிய தமிழுக்கும் எல்லையாகியும், நான்கு வேதங்களும் பிற சாத்திரங்களும் காட்டும் முடிவான பொருளைத் தன்பாற் கொண்டுள்ளதாகியும், நல் அறிவுக்கு வரம்பாகியும் புகழ் நிரம்பிய உடலைப் போல பொலிவுற்று விளங்குகின்ற தேன்கூடுகளால் சுற்றிலும் நிரம்பப்பெற்ற குளிர்ந்த திருவேங்கட மலையில் போய்ச் சேருங்கள்.

ஆனால் அங்கே உள்ளே போய் விடாதீர்கள். அங்கே சென்றால் அதற்கு மேலே நீங்கள் செல்ல வேண்டும் என்று தோன்றாது. எனவே அதனை மிகவும் நெருக்கமாகச் சென்று பார்க்காமல், சீக்கிரம் கடந்து விடுங்கள். தெற்கே சென்று விடுங்கள். அப்போது தான் உங்கள் பணி சுலபமாகும் என்று சொல்வதாகவும் ஒரு பாட்டு இருக்கின்றது.

*"கோடு உறு மால் வரை அதனைக்*
*குறுகுதிரேல், உம் நெடிய கொடுமை நீங்கி, வீடு*
*உறுதீர்; ஆதலினால் விலங்குதிர்"*

எனவே திருவேங்கடமலை என்பது இராம அவதாரத்துக்கு முன்னாலேயே இருந்த மலை.

இங்கே பெரியாழ்வார் அர்ச்சாவதாரமான வேங்கடவாணனையும், விபவ அவதாரமான கண்ணனையும் இணைத்து பாடும் நயம் போற்றத்தக்கது.

திருமலையில் என்ன விசேஷம் என்று சொன்னால் அங்கே பூக்கக்கூடிய பூக்கள் எல்லாமே மலையப்பனுக்கே உரியது. திருமலையில் யாரும் பூக்களைச் சூடிக் கொள்வதில்லை.

சொந்த உபயோகத்திற்காக எடுத்துச் செல்வதில்லை. முகர்ந்து பார்ப்பதும் இல்லை. அங்கே பூக்கின்ற பூக்கள் அத்தனையும் புண்ணியனான எம்பெருமானுக்கே உரியது. இதை ஆழ்வார் காட்டுகின்றார்.

*"தேவும் எப்பொருளும் படைக்க பூவில்*
*நான்முகனை படைத்த தேவன்*
*எம்பெருமானுக்கு அல்லால் பூவும் பூசனையும்*
*தகுமே?"*

எனவே இந்தப் பூக்கள் எல்லாம் அவனுக்கே உரியது என்பதால் அவனை சூட்டிக் கொள்ளும் படியாக அழைக்கின்றார்.

அதிலும் இந்த பாதிரிப் பூ இருக்கிறதே, அதற்கு ஒரு விசேஷமான குணம் உண்டு.

இது காது கோளாறுகளைக் குணப்படுத்தும். செரிமான சக்தியை மேம்படுத்தும். உடம்பிலே காய்ச்சல், கண் எரிச்சல் போன்றவை இருந்தாலும் சரி செய்யும்.

ஒரு வகையில் இது உண்மை தானே. நம்முடைய கண் எரிச்சல் போக வேண்டும் என்று சொன்னால் குளிர்ச்சியான அந்த வேங்கட மலையை தரிசிக்க வேண்டும்.

நம்முடைய காதுகள் நல்ல விஷயங்களையே கேட்கும் சக்தியைப் பெற வேண்டும் என்று சொன்னால், அந்த வேங்கட மலையிலே இருக்கக் கூடிய எம்பெருமானையே நினைக்க வேண்டும்.

காரணம் அவர் பாதிரிப்பூ சூட்டிக் கொண்டு அங்கே எழுந்தருளியிருக்கிறான் கண்ணனாக.

பாசுரம் படிப்போம்...


# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 58

**இடமிருந்து வலம் :**

1. அஞ்சனையின் புதல்வர் - (6)
4. அனுமன் இராமரை சந்தித்த நதிக் கரை ...... (3)
7. காற்று தேவனின் மகன்....(6)
12. சரயு ஆற்றங்கரை நகரம்.....(4)
13. சிரஞ்சீவி என வரமளித்த தேவி...(2)
25. ஆஞ்சநேயரின் இதயக் கடவுள்...(3)

**வலமிருந்து இடம் :**

3. மாருதி மறுயுகத்தில் சந்தித்த தேவாதி தேவன் .....(5)
6. சீதையிடம் பாடிய பக்திகானம்....(5)
7. குரங்கு .....(4) வேறு பெயர்.
10. கன்னம் முறிந்ததால் வந்த பெயர்......(4)
11. மரணமில்லாதவன்......(5)
15. ஸ்ரீராமரை சரணடைந்த இராவணனின் தம்பி.......(5)
16. ஆஞ்சநேயர் பழமாகக் கருதி பறிக்கச் சென்றது.......(4)
20. மாருதியிடம் சீதை அளித்த அடையாளம்......(4)
23. பாதுகையால் நாடாண்டவன்......(4)
26. தமிழில் இராமாயணத்தை இயற்றியவர்........(4)



தொகுப்பு :
**திரு. டி.ஆர். மனோகர், தஞ்சாவூர், 99426 44807**

புதிருக்கு விடை அறிய 48ம் பக்கம் பார்க்கவும்...

**மேலிருந்து கீழ் :**

1. ஸ்ரீராமர் மாருதியைத் தழுவியது.....(6)
2. இலங்கை திசையைக் காட்டிய கழுகு.......(4)
5. ஆஞ்சநேயர் .....(3) வாயில் புகுந்து வெளியே வந்தார்.
8. பெரிய உருவம் பெற்றவர்.....(3)
9. அனுமனின் தாய்....(4)
11. அடியார்கள் கூறும் அடி......(7)
14. மறுயுகத்தில் தம்பி......(3)
15. விண்முட்ட வளர்ந்த உருவம்.....(6)
18. இராகவனின் பிரதிநிதி.....(5)
19. ஆஞ்சநேயர் செல்ல மறுத்த பரமபதம்.....(5)
21. அமைச்சர் என்பதன் வேறு பெயர்....(4)
22. சீதை இருந்த காடு......(6)
24. இலங்கையை எரித்தது.....(7)
26. சீதையிடம் காட்டிய மோதிரம்....(4)
27. பாரதப் போரில் ....(5) தேர் கொடியில் ஏறினான்.

**கீழிருந்து மேல் :**


17. தூக்கி வந்த மூலிகை மலை.....(4)

திருமலை திருப்பதி தேவஸ்தானம்
தலைக்கவசம்! உயிர் கவசம்!!
திருப்பதி – திருமலை மலைவழிச்சாலையில் இருசக்கர வாகங்களில் பயணம் செய்யும் பக்தர்கள் மலையை ஏறும் போதும், இறங்கும் போதும் தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிதல் அவசியமாகும்.
வாகனம் மலைவழிச் சாலையில் ஏறும் பொழுது 28 நிமிடமும் மலைவழிச் சாலையில் இறங்கும் பொழுது 40 நிமிடத்திற்கு முன்னதாக சென்றால் மீண்டும் மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.
– கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புத் துறை



# ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

2



## வீர்யவான்

*சிறிதும் அச்சமில்லாத வீரம் உடையவர்,*
*சிறிதும் மனத்தளர்ச்சி அற்றவர்.*

**திரு. உ.வே. வேளுக்குடி க்ருஷ்ணன் ஸ்வாமி,**
**சென்னை.**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**ஜய ஜய மஹாவீர!**

சீதையும், இராமனும் பஞ்சவடியில் இருந்த போது சூர்பணகை சீதையைக் கொல்லப் பார்க்க, உடனே லக்ஷ்மணன் அவள் காது–மூக்குகளை அறுத்தான். பழி தீர்ப்பதற்காக அவளுடன் பிறந்தவர்களான கரன், தூஷணன் ஆகியோர் 14,000 அரக்கர்களோடு வந்து எதிர்த்தனர். இராமர் தனியாகப் போரிட்டார். ஒருவனாகப் போரிட்ட இராமர் தனது வேகத்தைக் கூட்டக்கூட்ட இருவராய், மூவராய், பல உருவங்களோடும் போரிட்டது போல் புழுதி கிளம்பியது. இராமர் ஒருவராக தர்ம வழியில் பூமியில் நின்று, நேர்மையோடு போரிட்டார். ஆனால் அரக்கர்கள் பலராக, அதர்ம வழியில், ஆகாயத்திலிருந்து நேர்மையின்றிப் போரிட்டனர். ஆனாலும் அவர்கள் அனைவரையும் ஒரு மணி நேரத்திற்குள் அழித்து, திருமேனியில் ரத்தம் சொட்டச்சொட்ட மஹாவீரனாக இராமர் நின்றதைக் கண்ட சீதை உடனே ஓடி வந்து அவரைத் தழுவிக் கொண்டாள். ஒரு வீரனைத் தான் எந்தப் பெண்ணும் விரும்புவாள். எந்தப் போர்க்களத்திலும் மனம் கலங்காமல் செயல்படுவது தான் வீர்யம்!

**நம் வாழ்க்கையில் வீர்யம்!**

நாம் இராமரைப் போல் போர்க்களம் சென்று வீரம் காட்ட வாய்ப்புகள் குறைவு. ஆனால் நம் அன்றாட வாழ்க்கையில் வாய்ப்புகள் வரும். பொழுது விடிந்தால் பட்டாபிஷேகம். ஆனால் கைகேயி அதனைத் தடுத்து இராமர் காடு போக வரம் பெற்றாள். அதனைச் சொல்ல இராமரை அந்தப்புரத்திற்கு அழைத்தாள்.

செய்தி தெரியாத இராமர் உள்ளே சென்றார். இடி போன்ற சொற்களைக் கேட்டார். ஆனாலும் இடிந்து போகவில்லை. ஒரு சிங்கம் நடப்பது போல் முன்னிலும் மகிழ்ச்சியோடு வெளியேறினார். உள்ளே சென்றபோது இராமரின் முகம் தாமரை போல் இருந்தது. கையேயின் கொடிய உரை கேட்டு வெளியேறும் போதோ அப்பொழுதே மலர்ந்து கொண்டிருந்த தாமரையை அவர் முகம் வென்றது... என்று கம்பர் வியந்து கூறுகிறார்.

இன்பம்–துன்பம், லாபம்–நஷ்டம், வெற்றி–தோல்வி ஆகிய இரட்டைகளை சமமாகப் பார்ப்பதே உண்மையான வீர்யம்.

கருத்து 2: ஆபத்துக்களைக் கண்டு அஞ்ச மாட்டோம். இன்னல்கள் நேரிடினும் எதிர் கொண்டு அவற்றைத் தூள் தூளாக்குவோம்! வாழ்க்கையில் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் போதும் கலங்கமாட்டோம்! ஸ்ரீராமபிரானின் பேரருளால் நாமும் நல்ல வீரர்களே!

*வளரும்...*

# மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ
ஸ்ரீ.உ.வே.அ.கிருஷ்ணமாசார்ய
ஸ்வாமி, திருவரங்கம்,
98842 89887.

சென்ற இதழின் தொடர்ச்சி...

திருமலாதேவம்மா, வைரம், கெம்பு, மரகதம், முத்து ஆகியவை பதித்த சர பதக்கத்தையும், சோளிங்கவரப்பட்டுவில் உள்ள "பிராட்டி குலத்தூர்" என்னும் கிராமத்திலிருந்து வரும் வரிப் பணத்தில் தினப்படி பிரசாதங்களுக்கான ஏற்பாடு ஆகியவற்றை சமர்ப்பித்தார் (73-75 of Vol. III). இம்மூன்று கல்வெட்டுத் தொகுப்புகளும் அரசர் மற்றும் இரு அரசிகள் ஆகியோரின் பெயர்களில் தனித்தனியாக, திருப்பணிப் பிள்ளை (திருக்கோயிலுக்கான திருப்பணிகளை மேற்பார்வையிடுபவர்) என்பவர் பாதுகாக்க வேண்டும் என்றும், அதற்காக அவருக்குப் பிரசாதங்கள் வழங்கப்படும் என்றும், மேலும் அரசர் ஏற்படுத்திய பிரசாதங்களிலிருந்து அவருக்கும் அவரின் இரண்டு அர்ச்சகர்களுக்கும் பங்கு வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (Dev. Epi. Rep. pp. 159 and 200). அடுத்து அவர் மலையப்பனுக்கு ஒன்றரை ஆண்டுகள் கழித்து கைங்கர்யங்கள் செய்தார்.

அதற்குள் அவர், திருமலை ரௌத்ரப்யாவை உயிருடனும் மற்றும் உதயகிரி கோட்டை, அட்டங்கி, வின்னுகொண்டா போன்ற மற்ற கோட்டைகளையும் கைப்பற்றி இருந்தார். பிறகு கொண்ட வீடு கோட்டையை முற்றுகையிட்டு, ப்ரதாபருத்ரகஜபதியின் மகனான வீரபத்ரய்யா, குமாரஹம் வீரபத்ராவின் மகனான நரஹரி தேவா, ராச்சூரி மல்லுகான், உதந்தாகான், மேலும் கஜபதியின் ஆதிக்கத்திலுள்ள பல சிற்றரசர்கள் ஆகியோரை உயிருடன் கைப்பற்றி, அவர்களின் உயிருக்கு தன்னால் ஆபத்து இல்லை என்று உறுதியளித்திருந்தார். 25.10.1515 அன்று 71124 வராகன்கள் எடையுள்ள நவரத்ன பிரபாவளி அல்லது மகர தோரணத்தை தன் தலைநகரிலிருந்தே சமர்ப்பித்தார்.

அடுத்து அவர் திருமலைக்கு 2.1.1517 அன்று சென்றார். அப்போது மலையப்பனுக்கு கந்தமாலை, பதக்கம், கர்ப்ப க்ருஹத்திற்கு மேல் உள்ள விமானத்திற்கு தங்கமுலாம் பூசுவதற்காக 30000 வராகன்கள், மலையப்பனுடைய எண்ணெய் காப்பு மற்றும் திருமஞ்சனத்திற்காக என்று கோதகர நாட்டில் (கொடவர் நாடு என்று அழைக்கப்படும் திருப்பதியைச் சுற்றி உள்ள கிராமங்கள்) இருந்து வரும் வரிப்



பணத்தில் இருந்து 1000 வராகன்கள் மற்றும் வேறு சில வரிகளிலிருந்து மலையப்பனின் தினப்படி திருவாராதனத்திற்காக 500 வராகன்கள் ஆகியவற்றை சமர்ப்பித்துள்ளார். இது கிருஷ்ண தேவராயரின் ஐந்தாம் முறை தரிசனமாகும் (Dev. Epi. Rep. pp. 163 and 164 No 80 of Vol III). இது அவர் கும்பகோண மகாமகத்திற்குச் செல்லும் போது தரிசித்தார்.

மேலும் கல்வெட்டு எண் 80, கிருஷ்ணதேவ ராயர் ஐந்தாம் முறை சென்று வந்தவுடனே மலையப்பனை தன் முதல் மனைவியான திருமலா தேவியுடன் 17.2.1521 அன்று சென்று தரிசித்தார் என்று குறிப்பிடுகிறது. அந்த சமயத்தில் மலையப்பனுக்கு நவரத்னங்கள் பதித்த பீதாம்பரம், முத்து, கெம்பு, மரகதம், நீல மாணிக்கம் ஆகிய விலையுயர்ந்த கற்கள் பதித்த குலாவு, நவரத்னங்கள் பதித்த இரண்டு சாமரங்கள் ஆகியவற்றை சமர்ப்பித்துள்ளார். மேலும் அவருடைய மனைவியான திருமலா தேவியின் வாயிலாக நவரத்னங்கள் பதித்த பதக்கத்தை சமர்ப்பித்துள்ளார். கூடுதலாக 10000 வராகன்களும், பதக்கமும் சமர்ப்பித்துள்ளார். இது ஏழாம் முறையும், இறுதி முறையுமாக திருமலையப்பனை ராயர் தரிசித்ததாகும்.

இதன் நடுவே அவர் ஆறாம் முறை மலையப்பனை தரிசித்தது 6.10.1518 அன்றாகும். அதாவது மலையப்பனின் விமானத்திற்கு தங்க முலாம் பூசுதல் நிறைவடைந்து (9.09.1518) 5 வாரங்களுக்குப் பின்னராகும். அந்த சமயம் தன் மனைவி திருமலாதேவி மற்றும் பிறந்து சில மாதங்களேயான தன் மகன், திருமலைராய மஹாராயா ஆகியோருடன் வந்திருந்தார். அந்த சமயத்தில் அவர் திருவேங்கடவனுக்கு சில நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டதாக கல்வெட்டு கூறுகிறது (Dev. Epi. Rep. pp. 165 - 166).

ஆக இதுவரை, கல்வெட்டுகளிலிருந்து, கிருஷ்ணதேவ ராயர் முதல் மூன்று முறை 10.02.1513, 2.5.1513 மற்றும் 16.06.1513 ஆகிய தேதிகளில் தன்னுடைய ராணுவ பிரசாரங்கள் மற்றும் தன் நாட்டின் அரசியல் நிலைமைகளை சீராக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சமயங்களில் திருமலையப்ப ஸ்வாமியை தரிசித்துள்ளார். நான்காம் முறை, உதயகிரி கோட்டையைக் கைப்பற்றிய ஒரு மாதத்திற்குள்ளாகவே அதாவது 8.7.1514 அன்று தரிசித்தார்.

ஐந்தாம் முறை, அவர் பிரதாபருத்ர கஜபதியை வென்ற பின் மகாமகத்திற்காக கும்பகோணம் செல்லும் வழியில் 5.1.1517 ஆம் தேதி தரிசித்தார். ஆறாம் முறை அவர் மகன் பிறந்து சில மாதங்களுள் அதாவது 16.10.1518 அன்று தரிசித்தார். இறுதியாக, ஏழாம் முறை அவர், 17.2.1521 அன்று தரிசித்தார். இந்தத் தரிசனங்களின்போது அவர் மலையப்பனுக்கு ஏராளமான ஆபரணங்கள், பதக்கங்கள், கிரீடங்கள், குலாவு, பீதாம்பரம், மிகச் சிறந்த நவரத்ன பிரபாவளி அல்லது 71124 வராகன்கள் எடையுள்ள மகர தோரணம், 75000 வராகன்கள், சிறிய கிண்ணங்கள், தாம்பாளங்கள் மற்றும் பல கிராமங்கள் ஆகியவற்றை சமர்ப்பித்துள்ளார். இதன் மொத்த மதிப்பு பல லட்சம் வராகன்களைத்தாண்டும். இன்றைய கணக்கில் பல கோடி ரூபாய்களுக்கும் மேலாகும். ஆனால் பிற்காலத்தில், கோல்கொண்டா சுல்தான்களாலும், மற்றவர்களாலும் கொள்ளையடிக்கப்பட்டதால், இன்று கிருஷ்ண தேவ ராயர் சமர்ப்பித்த ஒன்றைக் கூட நம்மால் காண முடியவில்லை.

முற்றும்...



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம் -25

சத்ரௌ மித்ரே புத்ரே பந்தௌமா யத்நம்
குரு விக்ரஹ ஸந்தௌ ।
பவ ஸமசித்த ஸர்வத்ர த்வம்
வாஞ்ச்சஸ்யசிராத் யதி விஷ்ணுத்வம்॥

**நீ விரைவில் மோக்ஷம் (விஷ்ணுத்வம் – முக்தி – பரமபதநாதனின் திருவடியை அடைதல்) வேண்டும் என்று விரும்புவாய் என்றால் – பகைவனிடத்திலும், நண்பனிடத்திலும், பிள்ளையிடத்திலும், உறவினரிடத்திலும் சண்டை போடுவதிலும், சமாதானம் செய்வதிலும் முயற்சி செய்யாதே. எல்லோரிடத்திலும் ஒரே விதமான மனம் உள்ளவனாக இருப்பாயாக (பகைமையும் நட்பும் இன்றி சலனம் இல்லாத சமமான நோக்குடன் இருப்பாயாக)**

– திரு. சீதாராமன், சென்னை.



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## अष्टमः पाठः பாடம்-8

1. कश्चित् = ஒரேஒருவன் 2. कतिचित् = சிலர் 3. स्यात = நீங்கள் இருப்பீர்கள்

4. एकत्र = ஓரிடத்தில் 5. किञ्चित्,ईषत् = கொஞ்சம்,சிறிதளவு 6. नो चेत् = இல்லாத பக்ஷத்தில்

7. मा = வேண்டாம் 8. स्याम = நாங்கள் இருப்போம் 9. स्युः = இருப்பீர், வேண்டும்,இயலும்

### வினாக்கள்

1. तत्र कश्चित् स्यात्।
2. नो चेत् यूयं तत्र स्यात।
3. कतिचित् तत्र सन्ति।
4. वयम् अत्र स्याम।
5. तत्र किञ्चित् अपि नास्ति।
6. यूयं तत्र मा स्यात।
7. कतिचित् अत्र स्युः।
8. अत्र किम् अपि नास्ति।
9. एते कतिचित् तत्र नासन्।
10. वयं कतिचित् अत्र स्मः।

1. நீங்கள் சிலர் இங்கே இருப்பீர்கள்.
2. நாங்கள் சிலர் அங்கே இருப்போம்.
3. இங்கே எவரும் இல்லை.
4. அங்கே நேற்று யார் இருந்தாரோ இங்கேயும் அவரே இருக்க வேண்டும்.
5. நாங்கள் எங்கே இருக்க வேண்டும்?
6. அவர்களும் ஏனோ இங்கே இருக்க வேண்டும்?
7. நீங்கள் ஒரே இடத்தில் இருங்கள்.
8. இப்பொழுது அங்கே யாரும் இல்லை.
9. நீங்கள் இன்று இரவு அங்கு இருக்க வேண்டுமா?
10. இல்லாதபக்ஷத்தில் நாங்கள் அங்கு இருப்போம்.

### விடைகள்

1. அங்கே ஒரே ஒருவன் இருந்தான்.
2. இல்லாத பக்ஷத்தில் நீங்கள் அங்கு இருப்பீர்கள்.
3. சிலர் அங்கே இருக்கிறார்கள்.
4. நாங்கள் இங்கே இருப்போம்.
5. அங்கே சிறிதளவும் இல்லை.
6. நீங்கள் அங்கே இருக்க இயலாது.
7. சிலர் இங்கே இருக்க இயலும்.
8. இங்கே எதுவும் இல்லை.
9. இவர்கள் சிலர் அங்கே இல்லை.
10. நாங்கள் சிலர் இங்கே இருக்கின்றோம்.

1. यूयं कतिचित् अत्र स्यात।
2. वयं कतिचित् तत्र स्याम।
3. अत्र केऽपि न स्युः।
4. तत्र ह्यः यः आसीत् सः अत्रापि स्यात्।
5. वयं कुत्र स्याम।
6. किं वा तेऽपि अत्र स्युः।
7. यूयं एकत्र स्यात।
8. इदानीं तत्र केऽपि न सन्ति।
9. यूयम् अद्य नक्तं तत्र स्यात किम्?
10. नो चेत् वयं तत्र स्याम।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி
தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா

# நாலாயிரம் பெற்ற நாதமுனிகள்

– திரு. எஸ்.ஸ்ரீதுரை, வேலூர், 94861 39685.



*"ஓராயிரத்துள்இப்பத்தும்....ஓராயிரத்துள் இப்பத்தும்....."*

எம்பெருமான் திருக்கோயிலின் கண்டாமணி ஓசையைப் போல் ஆசாரியர் நாதமுனிகளின் திருச்செவிகளில் இப்போதெல்லாம் இந்த வார்த்தைகளே எதிரொலிக்க ஆரம்பித்திருக் கின்றன.

"எம்பெருமானே, ஸ்ரீமந்நாராயணா, அந்த ஆயிரம் திருவாய்மொழிப்பாசுரங்களையும் அடியேனது வாழ்நாளுக்குள்ளாக அறிந்து கொள்ளும் பாக்கியத்தை அடியேனுக்கு அளிப்பாயா...?"

முக்தியை மட்டுமே இதுவரை வேண்டிய தமது திருவாயால், பக்தியால் விளைந்த பாசுரங்களை வேண்டி மனமுருகி விண்ணப்பிக்கிறார் நாதமுனிகள்.

நம்மாழ்வார் அவதரித்த திருத்தலமான திருக்குருகூரில் மட்டுமே தமது வேண்டுகோளுக்கு விடை கிடைக்கும் என்பதை உணர்ந்திருக்கும் நாதமுனிகள் நடையை எட்டிப் போடுகிறார்.

ஆஹா, அது ஓர் அற்புத அனுபவம்.

எம்பெருமான் அனுப்பி வைத்த விசேஷத் தூதர்கள் போன்றே காட்டு மன்னார் கோயிலுக்கு வருகை தந்த வெளியூரைச் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ண வர்கள் இசைத்த நம்மாழ்வாரின் பாசுரங்கள் இப்போதும் ஓர் அமிருத தாரையாக நாதமுனிகளின் செவிகளில் சுரக்கிறது.

என்ன ஒரு இனிமை அந்தத் தமிழ்ப் பாசுரங்களில்....அந்தப் பாசுரங்களை ஓதிய அந்த ஸ்ரீவைஷ்ணவர்களின் குரலில் தான் என்ன ஒரு மாதுர்யம்...

"ஆஹா, ஆஹா, பிரமாதம், அற்புதம்..." என்று நெஞ்சார்ந்த வார்த்தைகளால் பாராட்டிய உள்ளூர் அடியவர்களை முந்திச் சென்ற நாதமுனிகள் அந்தப் பாசுரம் பாடியவர்களை அணுகி, மிகவும் மரியாதையுடன் அவர்களை நோக்கி வினவினார் –

"ஸ்ரீ வைஷ்ணவர்களே! அடியோங்கள் உங்க ளுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். தேவாமிரு தத்தையொத்த ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தச் சுவையை எமக்கும் இன்று காட்டினீர்கள். மிகவும் நன்றி.

அடியேன் உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்..."

"கேளுங்கள் சுவாமி தங்களுக்கு பதிலளிப்பது எங்களின் பெரும்பாக்கியம்..."

"நீங்கள் ஓதிய பதிகத்தின் கடைசிப் பாசுரத்தில், *"குருகூர்ச்சடகோபன் குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்"* என்று கூறப்பட்டிருப்பதால், இவை திருக்குருகூரில் அவதரித்த சடகோபர் என்னும் நம்மாழ்வார் அருளிய ஆயிரம் பாசுரங்களில் ஒரு பதிகம் என்று தெரிகிறது. இவை போக, மிகுந்துள்ள தொள்ளாயிரத்துத் தொண் ணூறு பாசுரங்களை நீங்கள் அறிவீர்களோ...?"

வந்தவர்களில் மூத்தவரான ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் சற்றுத் தயக்கத்துடன் பதில் கூறினார்.

"மன்னிக்க வேண்டும் ஸ்வாமி! எங்கள் மூதாதையர்கள் கர்ணபரம்பரையாகக் கேட்டு மனனம் செய்து எங்களுக்கு சொல்லிக் கொடுத்த

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலையான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத்துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க்கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதைகள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டுமல்லாமல் சித்திர, சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்.

பதிகம் இது. எந்த ஒரு திருக்கோயிலுக்குச் சென்றாலும், நாங்கள் ஒரே குரலில் இதைப் பாடி அந்த ஊர் பெருமானை மங்களாசாஸனம் செய்வது வழக்கம். வேறு எதுவும் எங்களுக்குத் தெரியாது....ஒரு வேளை....

நம்மாழ்வார் அவதரித்த ஆழ்வார் திருநகரிக்கே சென்று விசாரித்தால் இதற்கு விடை கிடைக்கலாம். இது அடியேனது அனுமானம்தான்...."

"மிக்க மகிழ்ச்சி ஸ்வாமி, மிக்க மகிழ்ச்சி... அய்யா, சன்னிதி பரிசாரகர்களே, இந்த பாகவதோத்தமர்களுக்கு வயிறாரப் பெருமாள் பிரசாதங்களைக் கொடுங்கள்..." என்று சொல்லி விட்டுத் தமது திருமாளிகைக்குத் திரும்பிய நாதமுனிகள், வீரநாராயணப் பெருமாளிடம் மானசீக அனுமதி பெற்று, அன்றைய தினமே ஆழ்வார் திருநகரிக்குச் செல்ல ஆயத்தமானார்.

திருக்குருகூர் வடக்கு எல்லையை நெருங்கிய நாதமுனிகள், அங்கேயே மண்தரையில் தமது திருவுடல் தோய சாஷ்டாங்க நமஸ்காரம் மூலம், நம்மாழ்வாரின் அவதாரத் திருத்தலத்தை வணங்கி எழுந்தார்.

நெடு நாட்களாக நடந்து வந்த சோர்வினால் சிறிதளவும் தளர்வடையாமல் இருந்தார் நாதமுனிகள். திவ்வியப் பிரபந்தம் பிறந்த பூமியில் நுழைந்து விட்ட மனக்கிளர்ச்சி அவரது உடல் வாட்டங்களை மறக்கச் செய்துவிட்டது.

பொலிந்து நின்ற பிரான் திருச்சன்னிதியில் மனமுருகி வேண்டுகிறார் –

"எம்பெருமானே, நம்மாழ்வார் பாசுரங்கள் ஆயிரத்தையும் எப்படியேனும் அடியேனுக்குக் கொடுத்து விடு. இனி எடுக்கின்ற பிறவிதோறும் அடியேனும் அடியேனைச் சேர்ந்தவர்களும் உனக்கே அடிமை செய்து வாழ்வோம்...

வடமொழி வேதம் அறிந்தோர்க்குத் தோழனாய், அறியாதவர்க்கு வழிகாட்டியாய் விளங்கக் கூடிய திராவிட வேதமாகிய இந்தப் பாசுரங்களை நீதானப்பா அடியேன் கரங்களில் கொண்டு சேர்க்க வேண்டும்...!"

**திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்**

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர் ...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி ...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்ளாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயண வனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.

நாதமுனிகளின் வேண்டுதல் வீண்போகவில்லை.

ஸ்வாமி நம்மாழ்வாரின் சீடராகிய மதுரகவி ஆழ்வார் வம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவரின் அறிமுகம் கிடைக்கிறது.

“நம்மாழ்வாரையே தெய்வமாகப் போற்றி மதுரகவியாழ்வார் இயற்றிய *“கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்”* என்று தொடங்கும் பதிகப் பாசுரங்கள் அடியேன் வசம் உள்ளன.

இக்கோயிலில், திருப்புளியாழ்வார் என்றழைக்கப்படும் புளியமரப் பொந்தில் எழுந்தருளியிருந்த நம்மாழ்வாரை தியானித்து, அந்த *“கண்ணிநுண் சிறுத்தாம்பினால்”* பதிகத்தை யாரொருவர் பன்னீராயிரம் முறை ஓதுகிறாரோ அவருக்கு நம்மாழ்வார் அருளிய பாசுரங்கள் சித்திக்கும் என்று எங்கள் வம்சப் பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஆனால், எங்களில் யாரும் இதுவரை அதற்கு முயற்சி செய்ததில்லை...” என்று அந்த மதுரகவியாழ்வார் வம்சத்தவர் கூறவும்,

நம்பிக்கை பிறக்கிறது நாதமுனிகளுக்கு, நேராகத் திருப்புளியாழ்வார் முன்பு செல்கிறார்.

திருக்குருகூர் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இது ஒரு புதிய அனுபவம். அழகும், மிடுக்கும், தவமும், பணிவும் கலந்து தோன்றிய ஒரு வெளியூர்ப் பெரியவர் திருப்புளியாழ்வார் முன்பு தபஸ் செய்கிறார்.

சுற்றி நடக்கும் எதுவுமே தமக்குத் தொடர்பற்றது என்பது போன்ற ஒரு பாவனை. எத்தனை முறை *“கண்ணிநுண் சிறுத்தாம்பினால்”* பதிகத்தை ஓதினாலும் சிறிது கூடக் களைப் படையாத அவரது குரலும், திருமுகப் பொலிவும் அனைவரையும் வசீகரிக்கின்றன.

“நாதமுனிகள் என்று பெயராம். நம்மாழ்வார் பிரத்தியட்சமானால் தான் தபஸ்ஸை முடிப்பாராம்....” என்று முணுமுணுத்தபடியே உள்ளூர் வாசிகள் அவரைக் கடந்து செல்கின்றனர்.

ஆர்வம் மிகுதியால் சிலர் அங்கேயே நிற்கின்றனர்.

திருக்கோயில் அர்ச்சகர்களும், ஊர்ப் பெரிய மனிதர்களும் வந்து பார்த்தபோது, கொஞ்சம் கூடத் தொய்வடையாத நாதமுனிகளின் திருமேனியைப் பார்த்து வியக்கிறார்கள்.

“பெரிய யோகி போல் இருக்கிறதே...?”

“இப்படியே எத்தனை நாள் தான் இருப்பார். பசி எடுக்காதோ அவருக்கு....?”

அந்த நாளும் வந்தது. அந்த நேரமும் நெருங்கியது.

*“கண்ணிநுண் சிறுத்தாம்பினால்”* பதிகத்தைப் பன்னீராயிரமாவது முறையாக நம்பிக்கையோடு நாதமுனிகள் ஓதி முடிக்க –

# கண்ணன் கருத்துரை



*ஸுகது:கே ஸமே க்ருத்வா லாபாலாபௌ ஜயாஜயௌ ।*
*ததோ யுத்தாய யுஜ்யஸ்வ நைவம் பாபமவாப்ஸ்யஸி ॥* (2-38)

**இன்ப துன்பங்களை, லாப நஷ்டங்களை, வெற்றி தோல்விகளை சமமாகக் கருதி கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் போருக்கு முனைவாயாக! அவ்வாறு பயன் எதிர்பாராமல் நீ கடமையாற்றினால் பாவம் உன்னைப் பற்றாது.**


**தொகுப்பு :**
**பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன், திருப்பதி.**




திருப்புளியாழ்வாரிலிருந்து ஒரு பெரிய சோதிப் பிழம்பு தோன்றியது.

சுற்றி நிற்போர் அனைவரது கண்களும் கூசி நிற்க, நாதமுனிகளின் சூட்சுமக்கண்களுக்கு மட்டும் புலனாகியது அவ்வொளியுருவம்.....

ஆம்....நம்மாழ்வார் தோன்றிவிட்டார்.

“ஸ்வாமி நம்மாழ்வாரே, அடியேனை ஆசீர்வதியும்....”

“அப்படியே ஆசீர்வதித்தேன் நாதமுனி. உன்னால் ஸ்ரீ வைஷ்ணவம் மேன்மேலும் நன்மை பெறட்டும். என்னைத் தவிர பிற ஆழ்வார்களை எனது அவயவங்கள் என்றும், என்னை அவயவி என்றும் சொல்வார்கள்.

எனவே, நீ தேடி வந்த “திருவாய் மொழி” என்னும் எனது ஆயிரம் தமிழ்ப் பாசுரங்களைத் தவிர, நான் எம்பெருமானைப் போற்றி பாடிய திருவாசிரியம் முதலிய பிற பாசுரங்களையும், என்னுடைய அவயவங்களான மற்ற பதினோரு ஆழ்வார்கள் பாடிய எல்லாப் பாசுரங்களையும் உனக்கு அளித்தேன்.

அத்தனையும் உன் நினைவில் நீங்காதிருக்கும் வரத்தையும் அளிக்கிறேன். “எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளியிருக்கும் திருக் கோயில்கள் எல்லாவற்றிலும் இவை எல்லாம் தினசரி ஓதப்படுவதற்கு வழி செய்வாயாக...! இதோ எனது முதல் பாசுரம் –

*“உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்*
*மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்*
*அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்*
*துயர் அறு சுடரடி தொழுதெழுயென் மனனே!”*

நம்மாழ்வார் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களை எடுத்தோத, அவற்றைப் பட்டோலையிடத் தொடங்கி னார் நாதமுனிகள்.

தேவர்கள் மலர்மாரி பொழிய, தமிழ்த்தாயின் திருமேனி பெருமிதத்தில் மலர்ந்து பூரித்து நின்றது.

# கீதையும் ஜோதிடமும்



*"எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது!*
*எது நடக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கிறது!!*
*எது நடக்கவிருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்!!!"*

இங்கு, மூன்று வினைகளின் விளைவுகளை மூன்றே வரிகளில் மாதவன் மானிடர்களுக்கு கீதையின் வாயிலாக உபதேசித்தார்.

இதன் அடிப்படையில் ஜோதிடம் – ஓர் அறிமுகம்

பிரபஞ்சம் என்றும் இயக்கத்துடன் இருந்து கொண்டே இருக்கும். எனவே, மாற்றம் என்பது மாறாது இருப்பதே இயற்கையின் நியதி. இதிலிருந்து யாராலும் எவராலும் விலக இயலாது.

இந்நிலையில் நமக்குத் தெரியவராத விடயங்களை முன்னறிந்து அதை நாம் விவரணம் செய்யும் ஒரு காலக் கண்ணாடியே ஜோதிடம் ஆகும்.

ஜோதிடம் நான்கு வேதங்களில் ஒன்றான ரிக் வேதத்தில் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது. இக்கால கணிதம் நாம் நம் முப்பிறவியில் செய்த கர்ம வினைகற்கேற்ப இப்பிறவியில் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களை அறிந்து கொள்வதற்கே.

ஒவ்வொரு மானுட ஜென்மங்களுக்கு கணிக்கப்படும் காலகணிதம் இந்த ஜோதிடம் எனும் வான சாஸ்திரம்.

இக்காலகணிதம் எழுத முனையும் முன் வர்ணனையாக,

*"ஜெனனீ ஜன்ம சௌக்யாணம்*
*வர்தனீ லே சம்பதாம்*
*பதவீ பூர்வ புண்யாணாம்*
*லிக்யதே ஜன்ம பத்ரிகா!"*

இதன் பொருளாக இப்பிறவியின் ஜாதக வாயிலாக முன் வினைப் பயனால் தான் இப்பிறப்பு எடுக்கப்பட்டுள்ளது.

காலம் காலமாக குல சம்பிரதாயம் மூலம் அனுபவிக்கும் நம்முடைய புனர் ஜென்மங்களின் பாவ, புண்ணியங்களை கணக்கிட்டு இப்பிறவியில் நாம் ஆற்ற வேண்டிய கர்ம வினைகளை பற்றியும், இப்பிறவியில் செய்யும் கர்ம வினைகளின் மூலம் ஏற்படும் மறுபிறவினை பற்றி அறிந்து தெரிந்து, தெளிந்து அதற்கேற்றார் போல் இறை இன்பத்துடன் இப்பூலோகத்தில் ஆயுட் தீர்க்கமாக வாழ்வதற்கான ஜன்ம கால பத்திரம் ஆகும்.

ஜோதிடம் என்பது ஓர் அறிவியற் சார்ந்த வான் வெளி கணித சாஸ்திரம் ஆகும். ஒரு ஜோதிடர், பல ஜோதிடர்களின் அனுபவ வழியில் எழுதப்பட்ட புத்தகங்களின் மூலம் படித்து அறிந்து, புரிந்து பின் கற்பித்தல் என்பது ஒரு ஜோதிடரின் தலையாய கடமையாகும்.

பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தும் இன்றளவும் நீடித்து வரும் இந்த ஜோதிடக்கலை மற்றும் அறிவியல் எனும் வான்வெளி சாஸ்திரம்.

பல்வேறு நுட்ப கணிதங்களும் பழம் பெருமை மிக்க பாடல்களும், கிரக கால கணக்கீடுகளும் கோட்சார ரீதியாகவும் மிகத் துல்லியமாக கணித்து விளக்குவதே இதன் பிறப்பாகும். இவ்வனைத்தும் உள்ளடங்கிய மாபெரும் பொக்கிஷம் இந்த ஜோதிடக் கலை.

இங்கு ஆரம்ப கற்பினைக்கு உகந்த ஜோதிட நூற்கள் கொடுக்கப்பட்டுள்ளது. பின்வருமாறு;

1. ஜாதக அலங்காரம், கீரனூர் நடராஜன்
2. மங்களேஸ்வர்யம்
3. வீமகவி ஜோதிடம்
4. சாதக சூடாமணி
5. சினேந்திர மாலை
6. தாண்டவ மாலை
7. சாகத சிந்தாமணி
8. சந்திர காவியம்
9. ஆனந்த களிப்பு
10. புலிப்பானி ஜோதிடம்

தனிப்பட்ட முறையில் ஜோதிடத்தை யாரும் உரிமை கோரக் கூடாது என்பது கீதையின் உபதேசம்.


ஒரு நாள் ஜோதிடம் பின்வரும் ஐந்து அம்சங்கள் நிறைவுடன் இருக்க வேண்டும் அவை,

1. குருப்பாரம்பரியம்
2. வாக்கு சித்தி
3. தெய்வ வழிபாடு
4. ஜோதிடரின் ஜாதக வலிமை
5. ஜாதக பலன் எடுத்துரைத்தல்

இந்த ஐந்து அம்சங்களும் ஒருங்கிணைந்து ஜாதக பலன் கூற விழைந்தால் நிச்சயம் பலன் ஒரு போதும் தப்பாது.

*"தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே*
*ஹரி ஓம் நன்றாக குரு வாழ்க!"*

மற்றும் பல்வேறு கருத்துகளுடன் அடுத்த இதழில் மீண்டும் இணைவோம்.



முனைவர்
ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
திருவல்லிக்கேணி,
97862 80577.

**தோற்றுவாய்:**

பல்லாண்டு – "பலவருடம் நீடுவாழ்க", என்னும் வாழ்த்து. இறைவனுக்குப் பாடப்படும் இத்தகைய வாழ்த்து திருப்பல்லாண்டு என வழங்குகிறது. பன்னிரு பாடலையுடைய பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு, உலா வந்த திருமால் மீது உலக மக்களின் கண் படலாகாது என்பதற்காக அமைந்தது. இது பெரும்பாலும் நேரிசை வெண்பாவாலும், சிறுபாண்மை எல்லாப் பாவாலும் பாடப்படும் என்று பன்னிரு பாட்டியல் கூறும். மேலும் இது முதற்குறிப்பால் பெயர் பெற்றது.

இரு பல்லாண்டோடு நாலாயிரம் தொடங்குவது மிக்க மங்கலமாகும். இதில் 12 பாசுரங்கள் உள்ளன. முதற் பாசுரம் குறள் வெண் செந்துறையாகும். நூலின் தொடக்கம் மங்கலமான வெண்பாவின் இனமான, ஓசை நயமுள்ள குறள் வெண் செந்துறையில் அமைந்துள்ளது. வெண்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று, இரண்டு அடியாய்த் தம்முள் அளவு ஒத்து வருவது, விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடையதாய் இது வரும். தோடயம் – என்பது கடவுள் வணக்கமாகச் சொல்வது, நாட்டை இராகம். குறிஞ்சிப் பண்ணின் திறன் 8 இல் முதல் திறன், இதன் 4 பிரிவில் முதல் பிரிவே நாட்டை, சுவை, உவகை, மருட்கை. சுவாமி புறப்பாடு உவகைக்குரியது. நாலாயிர திவ்ய பிரபந்தமும் உவகைச் சுவையுடன் தொடங்குவது சிறப்பு, ஜம்பை தாளம்.

பாசுரம் 2 முதல் 12 வரை – அடதாளம். 6 சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம். கழிநெடிலடி நான்காய், தம்முள் அளவொத்து வருவது. இப்பிரபந்தத்தில் ஒவ்வொரு பாசுரத்திலும் "பல்லாண்டு, பல்லாண்டு" என்று சொல்லிப் பெருமானுக்கு மங்களாசாசனம் செய்திருப்பதால் இம்முதல் திருமொழி "திருப்பல்லாண்டு" – என்று பெயர் பெற்றது.

நாம் பெருமாளிடம் நமக்கு வேண்டிய மங்களங்களைப் பிரார்த்தித்து பெற வேண்டும். ஆனால் பெரியாழ்வாரோ பக்தியினால், ***"பகவானுக்குக் குறை ஒன்றும் இல்லாமலிருப்பதே நமக்கு மங்களம்"*** என்று பெருமானுக்கே "பல்லாண்டு" பாடிப் போற்றுகிறார்.... ***"மணிவண்ணா! உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு"***எனத் திருவடிக்கு மட்டும் மங்களாசாசனம் செய்து இருப்பினும் (போற்றி உரைத்தல்) இது பெருமானின் திருமேனி முழுமைக்கும் மங்களாசாசனம் செய்ததாகும். ".... இந்த மங்களாசாசனம் எல்லாக் காலங்களிலும் பெரியாழ்வார்க்கு உள்ளது" – ஸ்ரீவசன பூஷணம் – சூத் – 255 இன்பொருள். பாசுரம் 2 இல் திருமகள், சங்கு சக்கரங்களுக்குப் பல்லாண்டு கூறுகிறார்.

**அமைப்பு:**

இவர் தனியாக இருந்து பெருமானைப் போற்றிப் பாடுவதில் மனநிறைவடையாமல், இன்னும் பலரையும் துணையாகக் கூட்டிக் கொள்ள வேண்டும் என எண்ணுகிறார். உலகில் உள்ள மக்களை ஆராய்ந்து பார்த்ததில் அவர்கள்,

1) செல்வத்தை விரும்புவோர், 2) பரமபதத்திற்கு அருகிலுள்ள கைவல்யத்தை அடைந்து ஆன்மானு பவம் செய்ய வேண்டும் என்று விரும்புவோர், 3) பரமபதத்தை அடைந்து பகவானுடைய திருவடிகளில் நாளும்

# திருப்பல்லாண்டு



கைங்கரியம் செய்ய வேண்டும் என்று விரும்புவோர் என மூவகையாக அமைந்திருப்பதை அறிந்தார். இம்மூவரில் பெருமானின் திருவடிகளில் நாளும் கைங்கரியம் செய்ய விரும்பும் ஞானிகளை மட்டும் 3 ஆம் பாசுரத்தில் அழைக்கிறார். நீங்கள் பெருமானின் விழாவுக்குத் தொடக்கமான திருமுளைத் திருநாளுக்குப் புழுதி மண்ணைச் சுமந்து வாருங்கள். இலங்கையை அழித்த பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம். நாங்கள் ஏழாட்காலும் பழிப்பிலோம் என்றார். இதுகேட்ட ஞானியரும் நாங்களும் 7 தலைமுறை தொண்டு செய்வோம். மாலையில் பகைவனான இரணியனை அழித்த அரியைப் போற்றிப்பாடுவோம் – என்று அவர்கள் சொல்லிக் கொண்டுவந்தனர். (அரிஉரு – சிங்கம்; அரி–பகைவன்) (பாசுரம் 6).

அந்த ஞானிகள் தாம் பெருமானை நோக்கிப் பாடும் படியை 9 ஆம் பாசுரத்தில் அருளுகிறார். "பெருமானே! நீ உடுத்ததும், உண்பதும், சூடுவதும்" ஆகியவற்றை மகாப்பிரசாதம் என்று எண்ணி அவற்றை நாங்கள் ஏற்கிறோம். நீ அவதரித்த திருஓண நன்னாளில் உனக்கு ஒருவித குறைவும் இல்லாதிருக்கப் பல்லாண்டு பாடுவோம் என்றனர்.



2. "கைவல்ய அனுபவத்தை விரும்பும் நீங்கள், ஆத்மாவை மட்டும் அனுபவியாமல், திருமந்திரத்தைச் சொல்லி பக்தரோடு சேர்ந்து பெருமானுக்குப் பாடுங்கள்" – என 4 ஆம் பாசுரத்தில் அழைத்தார். இது கேட்ட அவர்கள், "நாங்களும் சங்கு சக்கரங்களால் திரு இலச்சினை செய்து கொண்டு, கண்ணனுக்கும், திருவாழி ஆழ்வானுக்கும் மங்களாசாசனம் செய்பவராய் ஆகி விட்டோம்" என்று சொல்லிக் கொண்டு வந்தனர் (பாசுரம் 7). இவர்கள் பல்லாண்டு பாடுவதை 10 ஆம் பாசுரத்தில் அருளுகிறார். "சுவாமியே! அடியோர்கள் உமக்கு அடிமையாகி, கைவல்யத்தை விட்டோம். நீ ரோகிணியில் அவதரித்து, கம்சனின் வில்லை முரித்து, காளியனை அடக்கினாய்; உனக்குப் பல்லாண்டு கூறுவோம் என்றனர் (பா. 10).

3. செல்வத்தை விரும்புவோரை 5 ஆம் பாசுரத்தால் அழைக்கிறார். "அரக்கரை அழித்த இருடீகேசனின் அடியவர்களே! நீங்கள் பழைய தன்மையை நீக்கி வந்து எங்களோடு சேர்ந்து பகவானின் 1000 திருநாமங்களையும் சொல்லிப் பல்லாண்டு பாடுங்கள்" – என்கிறார், அதுகேட்ட அவர்கள், "பெருமானே! நீ எமக்கு உணவு,

**ஆனி திருமஞ்சனம்**

**பலவிதமான அபிஷேக பொருட்களால் இறைவனுக்கு நீராட்டு உற்சவத்தை நடத்துவதை திருமஞ்சனம் என்பர். சிவபெருமானின் 64 மூர்த்தி வடிவங்களில் ஒன்று நடராஜர் வடிவம். உலகை தன் உள்ளங்கால் பிடியில் சுழல வைக்கும் தத்துவத்தை உணர்த்தும் விதத்தில் அமைந்ததே இந்த நடராஜர் வடிவம். வைகறை, காலை, உச்சி, மாலை, இரவு, அர்த்த ஜாமம் என பொழுதுகள் ஆறாகப் பிரித்து, ஆலயங்களில் ஆறு கால பூஜைகள் நடைபெறுகின்றது. இதில் வைகறை பொழுதான மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் நடைபெறும் திருமஞ்சனமும், ஆனி மாதம் (மாலை பொழுது – பிரதோஷ காலம்) உத்திரா நட்சத்திரம் அன்று நடைபெறும் திருமஞ்சனமும் மிகவும் சிறப்பானது. அனைத்து சிவாலயங்களிலும் இந்த உற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. பஞ்சபூதங்களில் ஒன்றான "ஆகாய" தலமான சிதம்பரத்தில் இந்த உற்சவம் 10 நாட்கள் பிரம்மோத்ஸவமாக மிகச்சிறப்பாக நடத்தப்படுகின்றது.**



# ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம்



ஸ்ரீபத்மாவதி தாயாரின் ஆலய பிரகாரத்தில் தெற்குப் பகுதியில் கிழக்கு முகமாக ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி ஆலயம் அமைந்துள்ளது. 15-16ஆம் நூற்றாண்டிற்கும் முந்தைய இவ்வாலயத்தின் கருவறையில் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி எட்டு அடி உயரத்தில் ஸ்ரீதேவி பூதேவியுடன் கொலுவீற்றுள்ளார்.

நெற்றியில் வெள்ளை நாமத்துடன் சங்கு சக்கரத்துடன் வரத முத்திரை ஹஸ்தத்துடன் சதுர் புஜத்துடன் அழகாக எழுந்தருளியுள்ளார். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வாலயம் 1906 ல் ஆனி மாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் மஹந்துக்களால் புணரமைக்கப்பட்டது. அப்பொழுது அவதாரோத்ஸவம் என்ற பெயரில் மூன்று நாட்கள் கர்பாலய சிகரத்தின் மேல் தங்க கலச ப்ரதிஷ்டை, மஹாகும்பாபிஷேகம் ஆகியவை நடைபெற்றன.

மறுபடியும் 100 ஆண்டுகளுக்குப் பின் 2006 ஜுன், (ஜ்யேஷ்ட) மாதத்தில் உத்திரட்டாதி நட்சத்திரம் அன்று நிறைவு பெறும் வகையில் மூன்று நாட்கள் மஹா அவதாரோத்ஸவத்தை நிகழ்த்தினர். அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதத்தில் மூன்று நாட்கள் வருடாந்திர அவதாரோத்ஸவத்தை நிகழ்த்துவது சிறப்பு.

இம்மூன்று நாட்கள் ஸ்நபன திருமஞ்சனம், அர்ச்சனை மற்றும் நிவேதனத்துடன் மாலை ஊர்வலமும் சிறப்பாக நடைபெறும். முதல் நாள் மாலை ஸ்ரீதேவி பூதேவி உடனுறை சுந்தரராஜ ஸ்வாமி பெரிய சேஷ வாகனத்திலும், அவர் மட்டுமே இரண்டாவது, மூன்றாவது நாட்களில் ஹனுமந்த வாகனம் மற்றும் கருட வாகனத்தில் உலா வருவார். பத்மசரோவரத்தில் நடைபெறும் தெப்போத்ஸவ திருநாட்களில் இந்த ஸ்வாமி இரண்டாம் நாள் தெப்பத்தில் பவனி வருவது குறிப்பிடத்தக்கது.

வெற்றிலைப் பாக்கு, ஆபரணம், சந்தனம் ஆகியவற்றைக் கொடுத்தாய், எம்மை ஞானம் பெறச் செய்தாய்; கருடக்கொடியை உடையவனே! உனக்குப் பல்லாண்டு பாடுவோம்," – என்றனர் (பாசுரம் 8). மேலும் இவர்கள் தாம் திருந்தியதைச் சொல்லிக் கொண்டு வந்ததைப் பாசுரம் 11 இல் குறிப்பிடுகின்றார். "திருமாலே" திருக்கோட்டியூரிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர் செல்வ நம்பியைப் போலவே, நானும் உனக்குப் பழமையான அடியவனாகி விட்டேன், "நமோ நாராயணா" – என்று சொல்லி, உன்னுடைய பல திருநாமங்களையும் தோத்திரம் செய்து உனக்குப் பல்லாண்டு பாடுவேன்".

இறுதிப் பாசுரம் பதிகத்தின் பயனைச் சொல்வது. பரமபதத்தில் எழுந்தருளி, சார்ங்கம் என்னும் வில்லையுடைய பெருமானை, ஸ்ரீவில்லி புத்தூரில் அவதரித்த விஷ்ணு சித்தர் என்ற பெரியாழ்வார் பாடிய இத்திருப் பல்லாண்டை, நமக்கு நல்ல காலம் வந்ததென்று இடைவிடாமல் சொல்வோர், மறுமையில் பரமபதத்தை அடைந்து அங்கும் பரம்பொருளின் திருநாமங்களைத் துதித்துப் பல்லாண்டு பாடுவர் (12) என்று முடிக்கிறார். இப்பாசுரங்களில் பல்லாண்டு கூறுதுமே எனவும் (3,7,9,10), கூறுமினே எனவும் (4), என்மினே எனவும் (5), கூறுவனே எனவும் (8,11), பாடுதுமே (6) எனவும் ஈற்றில் சொற்கள் அமைந்து முடியுமாறு பாடியுள்ளார்.

*- அமரர் முனைவர் இரா.வ. கமலக்கண்ணன், காஞ்சிபுரம்..*



திருமலை ஆலய உற்சவ மூர்த்தி அனுமன்

## ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவ திருக்காட்சிகள்
## (2021, மே 18 முதல் 26 வரை)




## ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவ திருக்காட்சிகள்
## (2021, மே 20 முதல் 22 வரை)




## ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவ திருக்காட்சிகள்
## (2021, மே 24 முதல் 27 வரை)





## ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி வஸந்தோத்ஸவ திருக்காட்சிகள்
## (2021, மே 29 முதல் 31 வரை)





# திருமலை திருப்பதி தேவஸ்தானம்






திருமலை ஸ்ரீவேங்கடேஸ்வரா வேதப் பல்கலைக்கழகத்தில் 2021,மே 14ஆம் தேதி
“அக்ஷய திருதியை” முன்னிட்டு சாஸ்த்திர முறைப்படி
நடைபெற்ற “ஸ்ரீலக்ஷ்மி நாராயண பூஜை”







திருமலை வஸந்த மண்டபத்தில் 2021, மே 25ஆம் தேதி சாஸ்த்திர முறைப்படி
நடைபெற்ற “ஸ்ரீபீஷண ந்ருசிம்ம பூஜை” நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. கூடுதல்
செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி தம்பதியினர்





அண்மையில் வேத விக்ஞான பீடத்தில் நடைபெற்ற “பூர்வாஷாட நக்ஷத்ரேஷ்டி யாக”த்தில்
பங்கு கொண்ட தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி அவர்கள்,
தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர் திரு. சிவகுமார் மற்றும் உயர் அதிகாரிகள்

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் எனும் ஊரில் வசித்து வரும் என் பெயர் சேகர் எனும் சந்திர சேகர். சொற்ப ஊதியத்தில் பல ஆண்டுகளாகப் பணியாற்றும் ஏழை. எதிர்காலமே கேள்விக்குறி. விதியை நொந்தவாறே வாழ்க்கை பயணம். இப்படிப்பட்ட வேலையில்....

1997-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஓர் புண்ணிய நாள் சுவாதி தினம், மாலை 3.30 மணி தருவாயில் சிங்கிரிகுடி லட்சுமி நரசிம்மர் ஆலய கருவறையில் அலுவலக சக நண்பர்களுடன் தஞ்சமடைந்து இருண்ட என் வாழ்வை நினைத்து மனக் குமுறல்களுடன் அழுது புலம்பினேன்...திடீரென்று மின்விளக்குகள் அனைந்தன. கருவறை இருளில் மூழ்கியது. ஐயோ!... இறைவா உன்னை நினைத்து உருகிடும் வேலையில் அபசகுணம் நேரிட்டதே! என்று அழுதேன் அரற்றினேன். பெருமாளான நரசிம்மரை கைகூப்பினேன்... ஆனால் பெருமாளோ தீப ஒளியில் "நான் இருக்கிறேன்" என்று அவன் திருமுகம் மட்டும் மின்னியது.

அன்று (1997) செப்டம்பர் மாதம் 3-ம் தேதி, மாலை 4.00 மணி அளவில் அலுவலகம் செல்ல இயலாத நிலையில் எதிர் வரும் விநாயக சதுர்த்திக்காக களிமண்ணால் விநாயகர் சிலைகள் செய்யும் பொருட்டு மண்ணை பிசைந்து கொண்டே.. என் விதியை நினைத்து திருப்பதி ஏழுமலையானிடம் முறையிட்டு அழுது அரற்றினேன்...

உடன் நண்பர் சுப்பிரமணி என்பவர் என்னை தேற்றினார்.. ஆலய பட்டாச்சாரியாரும் " உங்கள் வேதனை அடுத்த சுவாதிக்குள் தீரும்.. கவலை வேண்டாம்".. என அருள்வாக்கு கூறினார். இவ்வேளையில் ... என்னை நாடி என் அலுவலக நண்பர் வருவதை கண்டு திகைத்தேன்... தவித்தேன்.. பெருமாளே.. இது என்ன சோதனை?... என்று புலம்பினேன். வந்தவர் மனிதனாகத் தெரிந்தவர்.. அவர் கூறிய வார்த்தை அவரை என் கண் முன்னே தெய்வமாகத் தெரிந்தார்.. ஆம்!.. என் பெயரை அழைத்து உடனே அலுவலகம் வருமாறு அவசரமாக அழைத்தார்!.. கைகால்களை கழுவி சுத்தம் செய்துகொண்டு அருகிலிருந்த அம்மன் கோயில் அம்மனையும், பெருமாளையும் சேவித்துக் கொண்டு அலுவலகம் சென்றேன்.. சென்றவுடன் திகைப்பு!.. அலுவலகமே நிறைந்திருந்தது.. என்னை அலுவலக பெண் அதிகாரியிடம் அழைத்துச் சென்றனர்.. மனம் பதைபதைத்தது. படபடத்தது! என் கண்களுக்கு தெய்வமாகத் தெரிந்த அப்பெண் அதிகாரி.. புன்முறுவலுடன் அழைத்து எனக்கு உயர்பதவிக்கான அலுவலக ஆணையை தந்தார். நான் எதிர்பாராத உயர்பதவி.. அது? அதிகாரியின் பாதங்களில் விழுந்து ஆனந்த கண்ணீர் வடித்தேன். வறண்ட நா.. விற்கு தேன் கிடைத்தது போல் அக மகிழ்ந்தேன். நண்பர்கள் அனைவரும் என் உழைப்பிற்காக கிடைத்த பரிசு என்றனர். அளவிலா ஆனந்தமுடன், பெற்ற ஆணையுடன் நேராக அம்மன் ஆலயம் சென்று அங்கிருந்த பெருமாளின் பாதங்களில் தஞ்சமடைந்தேன்.

பின்பு ஆறு மாதம் கழித்து கண்கண்ட கடவுளான திருமலையானுக்கு முடியிறக்கி என் காணிக்கையை சமர்ப்பித்து என்னை அடிமையாக்கிக் கொண்டேன். வருடா வருடம் அவரை தரிசிப்பதையே இன்று வரை வழக்கமாக்கிக் கொண்டேன். அது முதல் எந்த நிலையிலும் கஷ்டமோ, துன்பமோ வந்தால், வேங்கடவனை நினைத்து தொழுத மாத்திரம் அவன் கருணை உடனே எனக்கு கிடைத்திடும் பாக்யம் எனக்கு இன்று வரை தொடர்வது ஒப்பற்ற அதிசயமாகும்.

கருவறையில் திருமலையானைக் காணும் அந்த ஒரு நிமிடம் நான் என்னை மறந்து அவன் மகிமையை நினைத்து அழுத வண்ணம் அவனை தரிசிக்கும் பேறு பெற்றவனாயிருந்து வருகின்றேன்.

"நாராயணா" என்று உச்சரித்த மாத்திரம் நான் என் வாழ்வில் கண்டவற்றாத அவன் கருணையால் இன்று வரை நித்தமும் என் குடும்பத்தாரும் நானும் மகிழ்ச்சியில் உழன்று வருவது உண்மையிலும் உண்மையே..!





திரு. ச.மு. சந்த்ரசேகர், புதுச்சேரி,
9894150860



# அனந்தமங்கலம் ஸ்ரீதிரிநேத்ர தசபுஜ வீர ஆஞ்சநேயர்



**திரு. நெய்வாசல் நெடுஞ்செழியன்,**
**சிதம்பரம், 94434 25862.**

**வை**ணவக் கோயில்களில் பெருமால் சன்னதி முன்பு வணங்கியபடி ஆஞ்சநேயரின் உருவச் சிலைகள் இடம் பெற்றிருக்கும். தனிக் கோயில்கள் பெருமளவு அனுமருக்காக உருவாக் கப்பட்டுள்ளன. இவர் இராமாயணத்தில் விஸ்வ ரூபம் எடுத்தமையால் பல கோயில்களில் பெரிய சிலைகள் வைக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் நாமக்கலில் 18 அடி உயர அனுமன் சிலை மிகவும் புகழ் பெற்றது. காசியிலும் அனுமனுக்குத் தனிக் கோயில் உண்டு. உலகிலேயே மிக உயரமான அனுமன் சிலை ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில் 135 அடி உயரத்தில் இடம் பெற்றுள்ளது.

இப்படி நாடெங்கும் அனுமனுக்கு பல்லாயிரக் கணக்கான ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. அனுமன் மீதான பக்தியாலும் அவரை வழிபடுவதற் காகவும் கட்டப்பட்ட ஆலயங்கள் பல. ஆனால் அனுமனே நேரில் வந்து எழுந்தருளியதாகக் கூறப் படும் ஒரே ஆலயம் தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி அருகில் அனந்த மங்கலத்திலுள்ள ஸ்ரீதிரிநேத்ர தசபுஜ வீர ஆஞ்ச நேயர் திருக்கோயிலாகும்.

இலங்கையில் யுத்தம் செய்து சீதையை மீட்ட பின்னர் புட்பகவிமானம் ஏறி இராமன், சீதை, இலக்குவன், அனுமன் முதலியோர் அயோத்திக்கு திரும்பும்போது வழியில் பரத்வாஜ மகரிஷியின் ஆசிரமத்தில் இறங்கி விருந்துண்டனர். அது சமயம் அங்கு வந்த நாரதர் இராமபிரானை வாழ்த்தினார்.

பின்னர் அவர் இராமபிரானிடம், இராவணன் அழிந்த பின்னரும் அரக்கர்கள் சிலர் ஆங்காங்கு இருக்கவே அவர்களில் மிகவும் கொடியவர்களான இரக்தபிந்து, இரக்தராட்சகன் ஆகிய இருவரும் கடலுக்கடியில் கடுந்தவம் செய்து கொண்டிருக் கின்றனர். அவர்களின் தவம் நிறைவடையுமானால் அவர்கள் இராவணனைப் போல வரம் பெற்று உலகை அழித்துவிடுவர். ஆதலால் உலக நன்மையின் பொருட்டு அவர்களை தாங்கள்தான் அழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அது கேட்ட இராமபிரான், "மகரிஷியே தாங்கள் சொன்னபடி அந்த அரக்கர்களும் அழிக்கப்பட வேண்டியவர்களே. ஆனால் நான் பரதனுக்கு கொடுத்த வாக்குப்படி உடனே அயோத்திக்கு திரும்ப வேண்டும். நான் வராவிட்டால் அவன் உயிரை விட்டுவிடுவான். இலக்குவனும் என்னைப்



பிரிந்து செல்லமாட்டான். எனவே அந்த அரக்கர்களை அழிக்க ஆற்றலுடைய மாவீரன் அனுமனை அனுப்புவோம் என்றார். அனைவரும் இதை ஆமோதிக்க அனுமனும் பணிவுடன் தன் ஒப்புதலை தெரிவித்தார். அனுமன் முன்னரே அழியாவரம் பெற்றவர். அளவிலா ஆற்றல் பெற்றவர். அட்டமாசித்திகளும் கற்றவர். எனினும் மாயாவிகளான அரக்கர்களை வெல்ல இது போதாது எனக்கருதிய திருமால் தம் சங்கையும் சக்கரத்தையும் அளித்தார். பிரம்மா தனது பிரம்ம கபாலத்தை வழங்கினார். ருத்ரன் மழுவைத் தந்தார். இராமபிரான் வில்லையும் அம்பையும் வழங்கினார். இப்படி தெய்வங்கள் வழங்கிய ஆயுதங்களைத் தாங்கி அனுமன் பத்து கரங்களுடன் காட்சியளித்தார். அப்போது கருடாழ்வார் தம் சிறகுகளை அளித்தார். கடைசியாக அங்கு வந்த சிவபெருமான் பத்து கரங்களிலும் ஆயுதங்கள் தரித்து நின்றிருந்த அனுமனைப் பார்த்தார். தாம் என்ன தருவது என்று சிந்தித்தார். தம்முடைய சிறப்புக்குரிய மூன்றாவது கண்ணையே அனுமனுக்கு அளித்தார். மூன்று கண்களும் (திரிநேத்ரம்), பத்துகைகளும் (தசபுஜம்) கொண்டு வீரக் கோலத்திலிருந்த அனுமன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

கடலுக்கு கீழே தவம் செய்த அசுரர்களையும் அவர்களது படையினரையும் அழித்து துவம்சம் செய்த அனுமன் தனக்கு தரப்பட்ட கடமையை செவ்வனே செய்து முடித்த திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் இராமனை சந்திக்க பயணமானார். அப்படி வரும் வழியில் கடற்கரையோரத்தில் இயற்கை அழகு நிரம்பிய ஓரிடம் அவரைக் கவர அங்கு தரையிறங்கினார். அந்த இடம் அவரை பரவசப்படுத்த அங்கேயே தங்கினார். அப்படி அவர் தங்கிய இடம் ஆனந்த மங்கலமாயிற்று. தற்போது வழக்கில் அனந்த மங்கலம் என்று அழைக்கப்படுகிறது. இவ்வூரில் அமைந்துள்ள ஸ்ரீசெங்கமல வல்லி தாயார் உடனுறை ஸ்ரீராஜ கோபால சுவாமி கோயிலுக்கு வெளியே ஆஞ்சனேயருக்கான மூலவர் ஆலயமும், கோயிலுக்கு உள்ளே உற்சவருக்கான தனி சன்னதியும் இடம் பெற்றுள்ளன.

பெருமாள் கோயில்களில் அனுமன் பரிவார மூர்த்தியாக இடம் பெற்றிருந்தாலும் அனுக்கிரக மூர்த்தியாகவே அருள் பாலிப்பார். இங்கும் அப்படியே இருக்கிறார்.

ஆனால் தலவரலாற்றின்படி அனுமன் இவ்வூருக்கு வந்ததாகக் கூறப்படும் காலத்திற்கும், விஜயநகர மன்னர்கள் ஆட்சியின் போது இங்கு பரிபாலனம் செய்த மண்டலத் தலைவர் ஒருவரால் கட்டப்பட்டதாக கூறப்படும் பெருமாள் கோயில் வரலாற்றுக் காலத்திற்கும் இடையேயான முரண்பாடு இரண்டு கோயில்களில் எது முந்தி கட்டப்பட்டது என்ற கேள்வியை எழுப்புகிறது.

தற்போதுள்ள ஸ்ரீராஜகோபாலசுவாமி ஆலயம் ஆழ்வார்கள் காலத்திற்குப் பிந்தையது என திருக்கோயில் வரலாறு கூறுகின்றது. ஆனால் தலவரலாற்றின்படி இராமாயணயுத்தம் முடிந்த பின்னர் புராணகாலத்தில் அனுமன் இங்கு வந்துள்ளார்.

ஆனாலும் இங்குள்ள அனுமனின் தோற்றமும் அதற்கான வரலாறும் இராமாயணத் தொடர்பை பறைசாற்றுவதால் இவ்வூரில் இறங்கிய அனுமன் தன் மனங்கவர்ந்த இராமபிரானை வழிபடுவதற்கு அவரது திருவுருவை பிரதிஷ்டை செய்திருக்கலாம். பிற்காலத்தில் வந்தவர்களால் அது ஸ்ரீராஜகோபால ஸ்வாமியாக வணங்கப்பட்டு வந்திருக்கலாம்.

இங்கு வீற்றிருக்கும் அனுமனை வழிபட்டால் அனைத்து தெய்வங்களின் அருளும் கிட்டும்.



# பதஞ்சலியின் ஆரோக்கிய ஆசனங்கள்

டாக்டர் கி.ஜ. நிகிலா வெங்கட்
கோயம்பத்தூர், 8940991234

பஞ்சபூதங்கள் எனப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றின் தன்மையால் மனிதன் படைக்கப்பட்டிருக்கிறான். குழந்தையாகப் பிறந்து நிலத்தில் உழன்று, உணவோடு நீரைச் சேர்த்து, நெருப்பிலிட்டு, சமைத்து உணவருந்தி, இதமாக வருடிச் செல்லும் காற்றை சுவாசித்து ஒவ்வொரு ஜீவனின் வாழ்வும் நிகழ்கிறது. ஆனந்தம் அடையும்போது ஆகாயத்தில் பறக்கிறான். இவ்வாறாக பஞ்ச பூதங்களினால் உருவாகிய மனிதன் பஞ்சபூதங்களோடு அரவணைத்து அவனது வாழ்க்கை நிகழ்த்தப்படுகிறது. இறுதியில் பிராணமற்ற உடல் ஆகாயத்தில் (எரியும் போது கலக்கிறது) மண்ணில் அடக்கமும் ஆகிறது.

இத்தகு உடலை வைத்துத்தான் இந்த உலகத்தில் நமக்கு இருப்பிடம். இதனை ஒவ்வொருவரும் உணர வேண்டும். ஒருவருக்கு எத்தகு உயர்வான லட்சியங்கள் இருந்தாலும் அதனை அடைய உடலின் ஒத்துழைப்பு சரியாக இல்லை என்றால் பாதி கிணறு தாண்டியது போலவே ஆகும். ஆகவே உடலை பாதுகாத்து நோயில் லாமல் வாழ்வதற்கு நமக்கு நாமே நல்ல நெறிமுறைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

“யோக சூத்திரங்கள்” என்று அழைக்கப்படும் யோகத்தைப் பற்றிய ஞானத்தினை பதஞ்சலி மகரிஷி நமக்கு அளித்துள்ளார்.

யோக சூத்திரத்தில் முதல் சூத்திரம் “இப்போது யோகம் விளக்கப்படுகிறது”.

**இரண்டாவது சூத்திரம் :**

இரண்டாவது சூத்திரம் என்ன என்பதை ஒற்றை வாக்கியத்தில் கூற வேண்டுமாயின் “மனம் பல வடிவங்களை எடுக்க விடாமல் தவிர்ப்பதே யோகம்”. பதஞ்சலி மகரிஷி யோகத்தை மிக எளிமை யாக விளக்கியுள்ளார். நம் மனம் எந்த ஒரு எண்ண அலைகளுக்கும் சலசலப்பு அடையா மல் அமைதியாக இருக்கும்போதுதான் நம் ஆழ்மனதை நம்மால் முழுமையாக அறிய முடிகிறது. இதுவே யோகமாகும்.

**பதஞ்சலி மகரிஷியின் மூன்றாவது சூத்திரம் :**

*“ததா த்ராஷ்டுஸ்வரூபேவஸ்தானம்”*

“ததா” அந்த நேரம் மனதில் அலைகளை கசக்கி கவனம் செலுத்து. நடைமுறைகள் உடன் பரிச்சயத்தை வளர்த்துக் கொள்ளும் வரை விழிப்புணர்வு கொள். அதன் மூலம் அனைத்து உணர்வுகளின் மூலத்தையும் எல்லா எண்ணங்களின் மூலத்தையும் காண லாம். மனம் அதனுடைய ஸ்வரூபமான அமைதியான நிலை அதாவது , எவ்வாறு நீரோடை அமைதியாக இருக்கும்போது அதன் அடித்தளத்தை காண முடிகிறதோ அதுபோல மனம் அமைதியாக இருக்கும்



போது நாம் நமது இயற்கையான உண்மை தன்மையை உணரமுடியும். நம்மை நாம் தொலைத்து விடாமல் நமது நிலைப்பாட்டிலேயே நிலைத்திருப்போம்.

**சித்தர் பாடல் :**

*கூறுவேன் தேகமது என்னவென்றால்*
*குருபரனே எலும்புதனைக் காலாய் நாட்டி*
*மாறுபடா எறும்புக்கு துவாரமிட்டு*
*வன்மையுடன் நரம்பினால் வலித்துக்கட்டி*
*தேறுதலாய் இரத்தமதை உள்ளே ஊற்றி*
*தேற்றமுடன் அதன் மேலே தோலை மூடி*
*ஆறுதலாய் வாய்வுதனை உள்ளடக்கி*
*அப்பனே தேகமென்ற கூறுண்டாச்சே...*

உடல் என்பது எலும்புகளை தூண்களாக வைத்து அவற்றின் இருப்பிடம் மாறி விடாமல் இருக்க, நுண்ணிய துவாரங்களால் இணைத்து நரம்புகளால் இறுக்கக் கட்டி, தோலால் மூடி, அவற்றுக்கு இடையே தசைகளைச் சேர்த்து, ரத்தத்தை ஊற்றி, உள்ளே வாயு எனப்படும் பிராணனை உள்ளடக்கி, உடல் என்ற ஒரு உருவம் உருவாக்கப் பட்டுள்ளது.

இத்தகு சிறப்பு வாய்ந்த வடிவமைப்போடு கூடிய இந்த உடலை விஞ்ஞானம் எவ்வாறு உணர்த்துகிறது என்பதை பார்ப்போம். 1) எலும்பு தனை – எலும்பு மண்டலம் , 2) நரம்பினால் – நரம்பு மண்டலம் , 3) இரத்தமதை – ரத்த ஓட்ட மண்டலம், 4) தோலை மூடி – தசை மண்டலம், 5)வாய்வுதனை

# திருமலையான் ஜ்யேஷ்டாபிஷேகம்



9ஆம் நூற்றாண்டிலிருந்து உபயதேவியருடன் ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவம் ஆகம விதிப்படி கடைபிடித்து நடத்தப்படுகின்றது. ப்ருகு மகரிஷியின் "ப்ரகிரீர்ணாதிகார" என்னும் நூலின்படி, மூன்று நாள் தைலாபிஷேக உத்ஸவமான இந்த ஜ்யேஷ்டாபிஷேகம், ஜ்யேஷ்ட மாதத்தில் ஜ்யேஷ்ட சுக்ல திரயோதசியில் துவங்கி ஜ்யேஷ்ட சுக்ல சதுர்த்தசி ஜ்யேஷ்ட நக்ஷத்திர பௌர்ணமியன்று நிறைவு பெறுகிறது. ஸ்நபனத்தின் பாகமாக ஹோமங்கள் முடிந்தபின், "தங்கக் கவசம்" பஞ்ச கவ்யம் மற்றும் வாஸ்து சுத்தி முறையால் சுத்திகரிக்கப்பட்டு உத்ஸவ விக்ரகமான திருமலையப்ப ஸ்வாமி மற்றும் தேவியர்களுக்கு, மந்திரங்கள் ஒலிக்க அணிவிக்கப்படும். இந்த ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவத்தில் மட்டுமே ஸ்வாமி தனது நிஜ உருவில் எவ்வித கவசமுமின்றி பக்தர்களுக்கு காட்சியளிப்பார்.

– மூச்சு மண்டலம். இந்த ஐந்து மண்டலங்களின் அடிப்படையில் மனித உடல் அமையப் பெற்றிருக் கிறது.

இந்த ஐந்து மண்டலங்கள் ஒவ்வொன்றும் தனது பணியை சரிவர செய்வதால்தான் இயக்கம் நன்றாக இருக்கிறது. நாம் உயிரோடு இருக்கிறோம் என்பதை நம்மால் உணர முடிகிறது.

ஒவ்வொரு மண்டலத்தில் உள்ள உறுப்புகள் அந்த மண்டலத்தில் உள்ள மற்ற உறுப்புகளும், வேறு மண்டலத்தில் உள்ள மற்ற உறுப்புகளும் ஏதாவது ஒரு வகையில் இணைந்து இருக்கிறது. எடுத்துக்காட்டாக உடலில் எலும்புகள் உறுதியா கவும், வலுவாகவும் இருந்தால் நரம்பு களும் அளவில்லாமல் உறுதியாகவும் வலுவாகவும் இருக்கும்.

நரம்புகளும் வலுவாக இருக்கும் போது ரத்தக் குழாய்களில் எந்த தடையும் இல்லாமல், உடலில் அனைத்து பாகங்களுக்கும் செல்ல முடிகிறது.

முறையான இரத்தச் சுழற்சியினால் இதயம் என்றும் இளமையுடன் தனது சுத்திகரிப்புப் பணியை செய்ய முடிகிறது.இரத்த சுழற்சியை முறையாக இயக்கும் பெரிய பொறுப்பு தசைகளைச் சார்ந்தது. அந்த தசை மண்டலத்திற்கு எலும்பு, நரம்பு, இரத்த ஓட்ட மண்டலம் தான் ஆதாரம். இந்த மண்டலங் களில் நிலைத்தத் தன்மை, உறுதி செயல்படும் தன்மை ஆகியவற்றை வைத்தே வாயு எனப்படும் மூச்சு, உயிராக உடலில் நிலை கொள்ளும். அந்த வகையில் இந்த ஐந்து மண்டலங்களின் அடிப்படை யில் உருவான மனித உடலை, உடலில் நிலை நிறுத் தும் உன்னத பணியைப் பின்வரும் மண்டலங்கள் கவனிக்கின்றன. அவை,

1. ஜீரண மண்டலம்
2. சிறுநீரக மண்டலம்
3. நாளமில்லா சுரப்பிகள் மண்டலம்
4. இனப்பெருக்க மண்டலம்

இவ்வாறாக மனிதனுடைய உடலில் இயங்கும் ஒன்பது மண்டலங்களைப் பற்றியும், அவற்றை வலுப்படுத்த உதவும் ஆசனங்கள் சிலவற்றையும் காணலாம்.

1) எலும்பு மண்டலம், 2) நரம்பு மண்டலம், 3) இரத்த ஓட்ட மண்டலம், 4) தசை மண்டலம், 5) சுவாச மண்டலம், 6) ஜீரண மண்டலம், 7) சிறுநீரக மண்டலம், 8) நாளமில்லா சுரப்பிகள் மண்டலம், 9) இனப்பெருக்க மண்டலம்.

அடுத்த இதழில் இதற்கான ஆசனங்களையும், அதனால் உண்டாகின்ற பலன்களையும் காண்போம்.

தொடரும்...

## ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம்



**கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின் பட்டத்து ராணி யான ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு வருடம் தோறும் வைகாசி (வைசாக பூர்ணிமா) மாதம் பௌர்ணமி அன்று முடியும் வகையில் மூன்று நாட்கள் வசந்தோத்ஸவம் நடை பெறும். திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத் திற்கு அருகில் உள்ள வசந்த மண்டபத்தில் தாயார் எழுந்தருள்வார். பின்னர் பால், தயிர், மஞ்சள், குங்குமம், கஸ்தூரி, குங்குமப் பூ, தேன், குங்குலியம், சந்தனம் என நறுமணப் பொருட்களால் ஸ்நபன திருமஞ்சனம் நடைபெறும். இரவு ஸ்ரீபத்மாவதி தாயார் யானை வாகனத்தில் எழுந்தருளுவார். அன்றைய தினம் ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவருக்கும் சிறப்பு அபிஷேகம், அலங்காரம் நடை பெறும்.**



சென்ற இதழின் தொடர்ச்சி...

# பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள்

## ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம்

*கதாஹம் கோவேரீ விமலஸலிலே வீதகலுஷ:*
*பவேயம் தத்தீரே ச்ரமமுஷி வஸேயம் கநவநே।*
*கதாவா தம் புண்யே மஹதி பலிநே*
*மங்களகுணம்*
*பஜேயம் ரங்கேசம் கமலநயநம் சேஷசயநம் ॥*

காவேரியின் நிர்மலமான தீர்த்தத்தில் அவகாஹித்து பாபமற்றவனாக எப்பொழுது ஆகப்போகிறேன்! தாபத்தைப் போக்கும் நிபிடமான சோலையையுடைய காவேரிக் கரையில் எப்பொழுது வசிக்கப் போகிறேன்!

புண்ணியமாயும் உத்க்ருஷ்டமாயும் உள்ள தடத்திலே (ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில்) பாம்பணை மேல் பள்ளி கொண்டிருக்கும் பரத்வ ஸௌலப்யாத்யு பயுக்தங்களான கல்யாண குணங்களையுடையவரும் புண்டரீகாக்ஷருமான ஸ்ரீரங்க நாதனை எப்பொழுது சேவிக்கப் போகிறேன்.

*பூகீகண்டத்வய ஸஸரஸ ஸ்நிக்த*
*நீரோபகண்டாம்*
*ஆவிர்மோத ஸ்திமித சகுநா*
*நூதிதப்ரஹ்மகோஷாம் ।*
*மார்கே மார்கே பதிகநிவஹை :*
*உஞ்ச்யமாநாபவர்காம்*
*பச்யேயம் தாம் புநரபி புரீம் ஸ்ரீமதீம்*
*ரங்கதாம்ந: ॥*

கமுகமரங்களின் கழுத்தளவும் பிரவஹிக்கிறதும், ருசியுடையதும் ஸ்நேஹயுக்தமுமான தீர்த்தத்தை சமீபத்தில் உள்ளதாயும், சந்தோஷமுண்டாகி அதனால் ஒரே இடத்தில் சலிக்காமல் இருக்கிற சுகசாரிகாதி பக்ஷிகளினால் அநுவாதம் செய்யப்பெற்ற (திருப்பிச் சொல்லப் பெற்ற) வேதகோஷத்தையுடையதாயும், ஒவ்வொரு மார்கத்திலும் வழிநடப்பவர் கூட்டங்களினால் திரட்டி எடுத்துக் கொள்ளப் பெறுகிற மோக்ஷத்தையுடையதாய்

உள்ள ஸம்பத்ஸம்ருத்தமான ஸ்ரீரங்கநாதனுடைய அந்த க்ஷேத்ரத்தை அடியேன் மறுபடியும் சேவிக்கப் பெறுவேனோ?

*ந ஜாது பீதாம்ருதமூர்ச்சிதாநாம்*
*நாகௌகஸாம் நந்தநவாடிகாஸு |*
*ரங்கேச்வர! த்வத்புரமாச்ரிதாநாம்*
*ரத்யாசுநாம் அந்யதமோ பவேயம் ||*

ஸ்ரீரங்கநாதா! இந்திரனது நந்தவனத்தில் அமுதத்தைப் பருகிக்களித்து, மதாந்தர்களாய்க் கிடக்கும் அமரர்களுக்குள் ஒருவனாக எப்போதும் ஆகமாட்டேன். உம்முடைய ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் திருவீதிகளிலுள்ள நாய்களுள் ஒன்றாக பிறக்கக் கடவேன்.

*அஸந்நிக்ருஷ்டஸ்ய நிக்ருஷ்ட ஜந்தோ:*
*மித்யா பவாதேந கரோஷி சாந்திம் |*
*ததோ நிக்ருஷ்டே மயி ஸந்நிக்குஷ்டே*
*காம் நிஷ்க்ருதிம் ரங்கபதே! கரோஷி ||*

ஸ்ரீரங்கநாதா! உமது அருகில் வராத நிக்ருஷ்ட ஜந்துவான ஒரு நாய் உமது சமீபத்தில் வந்தது என்று பொய்யான அபவாதத்தைச் சொல்லி சாந்தி ஹோமத்தைச் செய்கிறீர். அந்த நாயினும் நீசனான அடியேன் உமது சமீபத்தில் வந்திருக்கும் போது என்ன சாந்தி ஹோமம் செய்திடுவீர்? ஸ்ரீரங்கம் திருவீதிகளில் திரியும் நாய்களில் பிறவி வேண்டி முடித்தார். அதை அநுஸந்தித்து இந்த சுலோகத்தையும் இங்கு அநுஸந்திக்கிறார் போலும். அடுத்த சுலோகத்தில், ஸ்ரீரங்கக்ஷேத்திரம் போல் மற்றுமுள்ள திவ்ய தேசங்களும் எம்பெருமானார் உகந்தருளினவை என்று அருளிச் செய்துள்ளார்.

*ஸ்ரீரங்கம் கரிசைலம் அஞ்ஜநகிரிம்*
*தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ*
*ஸ்ரீகூர்மம் புருஷோத்தமம் ச பதரீ நாராயணம்*
*நைமிசம் |*
*ஸ்ரீமத் த்வாரவதீ-ப்ரயாக-மதுரா-*
*அயோத்யா-கயா-புஷ்கரம்*
*ஸாளக்ராம கிரிம் நிஷேவ்ய ரமதே*
*ராமாநுஜோயம் முநி: ||*

ஸ்ரீரங்கம், அத்திகிரி, காஞ்சி, திருவேங்கடம், அஹோபிலம், ஸிம்ஹாசலம், ஸ்ரீகூர்மம், புருஷோத்தமம் (ஜகந்நாதம்) பத்ரிகாச்ரமம், நைமிசாரண்யம், ஸ்ரீமத்த்வாரகை, பிரயாகை வடமதுரை, அயோத்தி, கயை, புஷ்கரம் சாளக்ராமகிரி முதலான இந்த திவ்யதேசங்களுக்கு எம்பெருமானார் உகந்து எழுந்தருளியிருந்தார்.

**உ.வே. டாக்டர் அனந்த பத்மநாபாசாரியார்,**
**சென்னை, 99620 11293.**

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ஸ்ரீசைலபூர்ணஸ்ஸ ஸமீக்ஷ்ய வர்யௌ விநிச்சித்ய ச தௌ*
*ப்ரஹ்ருஷ்ட: |*
*தத்ப்ரார்த்தி$_2$தச்சங்க$_2$ரத$_2$ாங்க$_3$ஸிஹ்நமந்த்ரப்ரதே$_3$ாSபூ$_4$*
*ந்நதயோஸ்தயயோச்ச ||*
(3)



**தமது திருவடிகளில் வணங்கி பிராத்திக்கப்பட்ட திருமலை நம்பி, மிகவுகந்தவராய், அவ்விருவரையும் தக்க வரன்களாக நிச்சயித்து, சங்க சக்ர தாரணம், மந்த்ரோபதேசம் முதலான பஞ்சஸம்ஸ்காரங்களை அவர்களுக்குச் செய்து வைத்தார்.**

108 திவ்விய தேச வைபவம்

59

# திருக்கூடல்

## (கூடல் அழகர் மதுரை)

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு:**

சத்ய விரதன் என்கிற பாண்டிய மன்னன் அரசாண்ட சமயம். வைகை நதியில் நித்யமும் அநுஷ்டானம் செய்வான். ஒரு சமயம், அர்க்யம் விடுவதற்காகக் கையில் நீரை எடுத்தபோது, பகவான் சின்னஞ்சிறு மீனாக அவனின் உள்ளங்கையில் தண்ணீருடன் சேர்ந்து வர, அதைத் தன் கமண்டலத்தில் சேர்க்க, மீன் வளர, பிறகு பெரிய அண்டா பாத்திரத்தில் நீரில் சேர்க்க, அங்கேயும் பெரிதாக வளர, பிறகு, கூடல் அழகர் குளத்தில் விட, குளத்தை விடப் பெரிதாக வளர, பிறகு பெரும் சமுத்ரத்தில் விட்டு விடலாம் என்று மன்னன் நினைத்த போது, அந்தப் பெரிய மகரமீன் மிகப் பெரியதாக வளர்ந்து மன்னனை உற்று நோக்கி, உனக்கு அருள் செய்யவே வந்ததாகச் சொல்லி, இன்றிலிருந்து ஏழாம் நாள், மஹாப்ரளயம் ஏற்பட்டு உலகமெல்லாம் அழியும் என்றும், அப்போது ரிஷிகள், வேதங்கள், படைப்புக்குத் தேவையானவை இவற்றுடன் ஒரு படகில் (ஓடம்) ஏறி அங்கு மிங்கும் நிலை குலைந்து போகாமல் இருக்க, தன்னுடைய ஒற்றைக் கொம்பில் படகைக் கயிறு கொண்டு கட்டுமாறும் சொன்னார். தான் முழுமுதற் கடவுள் நாராயணன் என்பதைப் புலப்படுத்தினார். மன்னனும் அவ்வண்ணமே நடந்து கொண்டு "வைவஸ்வத மனு"வாக ஆனார். இந்த எம்பெருமான் விச்வகர்மா அமைத்து அளித்த அஷ்டாங்க விமானத்தில், கூடல் நகரில் கதலீவனத்தில், க்ருத மாலா வைகை நதிக்கரையில், கூடல் அழகராக எழுந்தருளினார். இந்தச் சமயத்திலிருந்து பாண்டிய நாட்டுக்கு "மீன்" கொடியாக ஆயிற்று.

ஒரு முறை மிகவும் உக்ரமான ஓயாத மழையிலிருந்து இந்த நகரையும், மக்களையும் காக்க, பகவான் மேகங்களுக்குக் கட்டளை இட்டதாகவும், அவை, கட்டளைக்குப் பணிந்து மதுரையை நான்கு புறமும் நான்கு மாடங்களைப் போல ஆகாயத்தில் நின்று மழையைத் தடுத்ததாகவும் ஆதலால்" நான்மாடக்கூடல் என்று பெயர் பெற்றதாகவும் கூறுவர்.

மலயத்வஜ பாண்டியன், அகஸ்திய முனிவர் அளித்த விமானத்தில் ஆகாயத்தில் திருமாலிருஞ்சோலை மலை கோயில்மேல் சென்றதாகவும், பகவான் அவரை ஆட்கொள்ள அரசன், அழகருக்கு நிறையப் பணிகள் செய்ததாகவும் அழகரின் ஆணைப்படி மதுரைக்கு வந்து ஆட்சி புரிந்த சமயத்தில் அழகர் அருளால் பார்வதி தேவியைக் குமாரத்தியாகப் பெற்று, அழகர் ஆணைப்படி மதுரை சோமசுந்தரருக்கு விவாஹம் செய்து கொடுத்ததாகவும் வரலாறு பேசுகிறது.

ஒரு காலத்தில் இங்கு மாமரங்கள் வனமாக இருந்ததாகவும், இங்கு தபஸ் செய்த முனிவர்களை "காலநேமி" என்கிற அசுரன் துன்புறத்தியதாகவும், கூடலழகர் முனிவர்களின் சரணாகதியை





ஏற்று, சக்ரத்தால் காலநேமியை அழித்ததாகவும், சக்ரத்தாழ்வாரால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் "சக்ரதீர்த்தம்" என்று புகழ் பெற்றதாகவும் சொல்வர். அம்பரீஷன் தபஸ் செய்து முக்தி பெற்ற திவ்ய தேசம்.

**சிறப்புகள்:**

"பல்லாண்டு" அவதரித்த திவ்ய தேசம். விஷ்ணு சித்தர் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து இங்கு வந்து, மன்னனுடைய சபையில் நாராயணனே பரத்துவம் என்று ஸ்தாபித்து மன்னன் கட்டி வைத்திருந்த பொற்கிழிக் கம்பு வளைந்து, பொற்கிழி விஷ்ணு சித்தர் திருக் கரங்களில் விழ, மன்னன் மிகுந்த மரியாதையுடன் ஆழ்வாரை யானையில் ஏற்றி, வீதியெங்கும் ஊர்வலமாக அழைத்து வரும்போது ஆகாயத்தில் நாராயணன் கருடாருடனாகத் தரிசனம் கொடுக்க, ஆழ்வார் பகவானுக்குப் பல்லாண்டு பாடிய இடம். "மெய்காட்டும் பொட்டல்" என்று புகழ்பெற்று, இப்போது "மேங்காட்டுப் பொட்டலாக" இருக்கிறது.

| | |
|---|---|
| பெருமாள் | : மூலவர்: கூடல் அழகர் (கிழக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலம்) வ்யூக சுந்தரராஜன் |
| தாயார் | : மதுரவல்லித்தாயார், வகுளவல்லி, வரகுணவல்லி, மரகதவல்லி என்றும் திருநாமங்கள். |
| புஷ்கரணி | : ஹேமபுஷ்கரணி |
| விமானம் | : அஷ்டாங்க விமானம் |
| தீர்த்தம் | : சக்ரதீர்த்தம் க்ருதமாலா, வைகை நதி |
| ப்ரத்யக்ஷம் | : ப்ருகுமஹரிஷி, சௌனகாதி ரிஷிகள், பெரியாழ்வார். |
| ஆகமம் | : வைகானஸம் |
| மங்களாசாஸனம் | : திருமழிசை ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் |

**விசேஷம் :**

ஸ்ரீவிஷ்ணுசித்தர், பெரியாழ்வாராக ஏற்றம் பெற்ற தலம். அஷ்டாங்க விமானத்தில் முதல் தளத்தில் – சயன திருக்கோலம், 2ம் தளத்தில் நின்ற திருக்கோலம், மூன்று திருக்கோலங்களிலும் (அமர்ந்த, கிடந்த, நின்ற திருக்கோலங்கள்) சேவிக்கலாம். கூடல் அழகர், இடது திருக்கரத்தால் பக்தர்களை "வா" வென்று அழைப்பது போன்ற குறிப்பு மிக ஆச்சர்யமானது. இவர் "நிடு நீரவைய நெடுமால்", "இருந்தவளம் உடையார்", "இருந்தையூர் அமர்ந்த செல்வர்" என்றெல்லாம் பரிபாடல், சிலப்பதிகாரம் இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் புகழப்படுகிறார். "பல்லாண்டு" பாசுரத்தைப் பெற்ற பகவான், கூடலழகர். இவர் ஒருவரே, பிற்பாடுதான் திவ்ய தேசங்களில் "திருப்பல்லாண்டு" "அநுஸந்தானம் தொடங்கியது.

*"ஏடலர் தார் தென்னவர்கோன் ஏற்றிடவே பல்லாண்டு*
*பாடி உயர் கிழியறுத்த பட்ட பிரான்கண்களிப்ப*
*ஆடக அம்பரம் இலங்க ஆழி வளை ஏந்திய மா*
*கூடல் அழகிய பெருமான் கோகனகத்தன் வாழி"*

– வரதராச பாகவதம்

**த்யானச்லோகம்**

*"ச்ரேஷ்டேஸ்மிந் மதுராபுரே வரகுண ஸ்ரீவல்ல பாபீஷ்டதோ*
*ஹ்யஷ்டாங்காக்ய விமாந பூஷண மணிஸ் ஸம்வ்யூஹ ஸௌந்தர்யவாந் ।*





# மங்கள சுலோகங்கள்

*ப்ரஹ்லாத நாரத பராசர புண்டரீக*
*வ்யாஸாம்பரீஷ சுக சௌநக பீஷ்மதால்ப்யான் ।*
*ருக்மாங்கதார்ஜுனவஸிஷ்ட விபீஷணாதீன்*
*புண்யாநிமான் பரமபாகவதான் ஸ்மராமி ॥*

பிரகலாதர், நாரதர், பராசரர், புண்டரீகர், வியாசர், அம்பரீஷர், சுகர், சௌநகர், பீஷ்மர், தால்ப்யர், ருக்மாங்கதன், அர்ஜுனன் ஆகிய புண்ணிய மூர்த்திகளான பரம பாகவதர்களை (பெரும் பக்தர்களை) நினைவு கூர்கின்றேன்.

*ஸ்ரீமத்தேவ ஸரோ வரஸ்ய சதடே ப்ராசீம்*
*ஸமாலோகயந்*
*ஆஸீநோப்ருகு யோகி பூஜித பதச்சித்தே ஸதா*
*பாஸதாத்॥"*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

*"பீதாம்பர முதாராங்கம், வநமாலா விபூஷிதம்*
*ஸுந்தரம் புண்டரீகாக்ஷம் ஸர்வலோகைக*
*நாயகம்।*
*க்ருதமாலா தடேரம்யே கதலீஷண்டமண்டிதே*
*விமானே விச்வகர்மீயே ஸதா பச்யேம ஸுந்தரம்॥*

– விசேஷ த்யானச்லோகம்

**பாசுரம்**

*"அழைப்பன் திருவேங்கடத்தானைக்காண*
*இழைப்பான் திருக்கூடல் கூட - மழைப்பேர்*
*அருவி மணிவரன்றி வந்து இழிய, யானை*
*வெருவி அரவு ஒடுங்கும் வெற்பு.*

– திருமழிசை ஆழ்வார்

*கோழியும் கூடலும் கோயில் கொண்ட*
*கோவலரே ஒப்பர் குன்றமன்ன*
*பாழியந் தோளுமோர் நான்கு உடையர்*
*பண்டு இவர் தம்மையும் கண்டறியோம்*
*வாழியரோ இவர் வண்ணமென்னில்*
*மாகடல் போன்றுளர் கையில் வெய்ய*
*ஆழி ஒன்று ஏந்தியோர் சங்கு பற்றி*
*அச்சோ ஒருவர் அழகியவா!*

– திருமங்கை ஆழ்வார்

இத்திவ்ய தேசம் சேவிக்கும் போது திருப் பல்லாண்டு பாசுரங்களையும், ஸ்ரீபெரியாழ்வார் தனியனுடன் சேவிக்கலாம். அருள் மாரியால் நனைவீர்

*"வாழ்விப்பான் எண்ணமோ? வல்வினையில்*
*இன்னம் என்னை*
*ஆழ்விப்பான் எண்ணமோ? அஃது அறியேன்*
*தாழ்விலாப்*
*பாடல் அழகார் புதுவைப் பட்டர் பிரான்*
*கொண்டாடும்*
*கூடல் அழகா! நின் குறிப்பு"*

– பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்



**நாமாக்கள்**

541. ஓம் க்ருதாநந்த க்ருத் நம:
யமன் போன்ற இரணியனை அழித்தவனே
ஓம் த்ருஹிணப்ரஸவே நம:
நான்முகனைப் படைத்தவளே (வ்யஷ்டி ச்ருஷ்டிக்காக)

542. ஓம் மஹாவராஹ: நம:
மகத்தான வராஹரூபம் எடுத்தவனே
ஓம் யக்ஞகாமாயை நம:
பிரம்மாவை ஹவிஸ்ஸாகக் கொண்டு ஜகத் சிருஷ்டி என்னும் யாகத்தைச் செய்யும் ஆசையுள்ளவளே

543. ஓம் கோவிந்த: நம:
பூமியை வராஹ ரூபத்தில் அடைந்தவனே
ஓம் லேலிஹாநாயை நம:
சிருஷ்டி லீலாரஸத்தை அநுபவிப்பளே

544. ஓம் ஸுஷேண: நம:
சுத்த சத்வமய சரீரமுள்ளவனே
ஓம் தீர்த்தகர்யை நம:
ஜகத்ச்ருஷ்டியில் புண்ய க்ஷேத்ரங்களை உண்டாக்கி வைப்பளே

545. ஓம் கநகாங்கதீ நம:
தோள்வளைகளைப் போன்ற திவ்ய ஆபரணங்களை எப்போதும் அணிபவனே
ஓம் உக்ர விக்ரமாயை நம:
அடியார்களைக் காக்க கருடனை வாகனமாகக் கொண்டு சஞ்சரிப்பவளே

546. ஓம் குஹ்ய நம:
உபநிஷத்துக்களுக்கு மட்டுமே புரியக்கூடிய திருமேனி உடையவனே
ஓம் கருத்மது தயாயை நம:
கருடன் மீது வந்து காக்ஷி தருபவளே.

547. ஓம் கபீர: நம:
ஆழமான மகிமை உள்ளவனே
ஓம் அத்யுக்ராயை நம:
அடியார்களைக் காப்பதில் ஈடுபாடு உள்ளவளே

548. ஓம் கஹந: நம:
அறிய இயலாதவனே
ஓம் வாராஹ்யை நம:
பிறகு முக்தி ஐச்வர்யத்தை பெருமாளுடன் சேர்த்து தருபவளே

549. ஓம் குப்த: நம:
மகிமையறிந்த பூர்வாசார்யர்களால் காக்கப் பட்டவனே.
ஓம்மாத்ரு பாஷிண்யைநம:
தாயார் போல் நல்ல வார்த்தைகளால், தந்தையான பெருமாளின் சீற்றத்தைப் போக்கி சரணாகதி செய்ய; விரும்பியதைப் பெறுங்கள் என்று அமிர்தமாகச் சொல்பவளே.

550.ஓம் சக்ரகதாதர: நம:
சக்ரம், கதை முதலிய ஆயுததாரியே.
ஓம் அஸ்வக்ராந்தாயை நம:
நிற்கும் பெருமானைப் போல, தானும் எல்லா இடத்திலும் வியாபிப்பவளே.

ஸ்ரீமதே மதுரவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீஸங்கம ஸுந்தராய மல்லாண்ட திண்தோளன் ஆஹுயவரத பரப்ரஹ்மணேநம:

**குறிப்பு:**

மதுரை மாநகரின் நடுப்பகுதியில், இரயில் நிலையத்திற்கு அருகே உள்ளது. அருகே உள்ள ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது.


திவ்ய தேச வைபவம் வளரும்...

## சாஸ்த்திர நீதிகள்–89

அபார்த்தே விதூஷ மாக்ரே
வ்யவஹாரோ ந திஷ்டதி|
புரோ பாஸ்க்கர பாஸாம் ஹி
நீ ஹாரோ ந வதிஷ்டதே ||

பண்டிதர்கள் கூடி இருக்கிற சபையில் படிக்காதவன் எப்படி பேசினாலும் எடுபடாது. கடுமையான சூரிய வெப்பத்திலே பனிக்கட்டி தலை காட்ட முடியாது.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

## ஸ்ரீமந்நாதமுனிகள் வாழித்திருநாமம்...

ஸ்ரீமந்நாதமுனிகள் என்னும் ஆசார்யர் ஆனி மாதம் அனுஷ நக்ஷத்ரத்தில் காட்டுமன்னார்கோயிலில் அவதரித்தார். இவர் சேனை முதலியாருடைய முக்கியமான படைத்தலைவரான கஜானநர் என்னும் யானை முகமுடைய நித்ய சூரிகள் அம்சர் என்பர்.

*"ஆனிதனில் அனுடத்தில் அவதரித்தான் வாழியே*
*ஆளவந்தார்க்கு உபதேசம் அருளி வைத்தான் வாழியே*
*பானு தெற்கில் கண்டவன் சொல் பல உரைத்தான் வாழியே*
*பராங்குசனார் சொல் பிரபந்தம் பரிந்து கற்றான் வாழியே*
*கானமுறத் தாளத்தில் கண்டு இசைத்தான் வாழியே*
*கருணையினால் உபதேசக் கதி அளித்தான் வாழியே*
*நானிலத்தில் குருவரையை நாட்டினான் வாழியே*
*நலந்திகழும் நாதமுனி நற்பதங்கள் வாழியே"*

**பதவுரை**

ஆனிதனில் – ஆனி மாதத்தில், அனுடத்தில் – அனுஷ நக்ஷத்ரத்தில், அவதரித்தான் – தோன்றினவர், வாழியே – வாழ வேண்டும். ஆளவந்தார்க்கு – தன் பேரனான ஆளவந்தார் என்னும் ஆசார்யருக்கு, உபதேசம் – நல் வார்த்தைகளை, அருளிவைத்தான் – சொல்லி வைத்தவர், பானு – பாஸ்கரரான நம்மாழ்வாரை, தெற்கில் கண்டவன் – தெற்குத்திக்கிலே கண்ட மதுரகவியாழ்வார், சொல் – சொல்லான கண்ணிநுண் சிறுத்தாம்பை, பல உரைத்தான் – பன்னிரண்டாயிரம் தடவை சொன்னவர்.

பராங்குசனார் – பரரான பிற மதங்களுக்கு அங்குசம் போன்றவரான நம்மாழ்வாருடைய, சொல் பிரபந்தம் வாய்மொழியான பிரபந்தங்கள், பரிந்து கற்றான் – நம்மாழ்வார் மூன்று நாள் கனவில் சொல்ல கற்றுக் கொண்டவர். கானமுற – தேவகானம் நிலைக்க, தாளத்தில் – தாளத்தில் கண்டு இசைத்தான் – இடுவித்தவர். கருணையினால் – தன் மிக்க கருணையினால், உபதேசக் கதி – உபதேசமாக பரம்பரையை, அளித்தான் – கொடுத்தவர். நானிலத்தில் – நல்ல இந்த உலகில், குருவரையை – குருவை நிர்ணயித்து, நாட்டினான் – நிலை நிறுத்தியவர். நலம் திகழும் – நன்மை விளங்குகிற, நாதமுனி – ஸ்ரீமந்நாதமுனிகள், நற்பதங்கள் – நன்மை தரும் திருவடிகள், வாழியே – வாழ வேண்டும்.

(ஆனிதனில் அனுடத்தில் அவதரித்தான்) பன்னிரண்டு மாதங்களில் மூன்றாவது மாதம் ஆனி மாதமாகும். வடமொழியில் ஜ்யேஷ்டா எனப்படும். நக்ஷத்ர வரிசையில் அனுஷம்



பதினேழாவதாகும். இதற்கு வடமொழியில் அநுராதா என்று பெயர். "அநுராதா நக்ஷத்ரம் மித்ரோ தேவதா" என்று வேதம் கூறும்.

ஆழ்வார்கள் காலத்துக்குப் பிறகு அவர்கள் அருளிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் மேல் பக்தி, நம்பிக்கை இல்லாமல் தீய சக்திகளின் மேலீட்டால் அவை இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. அந்த சமயத்தில் பொதிய மலையில் கும்ப ஸம்பவர், ஆங்கீரஸர் முதலான முனிவர்கள் திருமலைக்குச் சென்று திருவேங்கடவனைத் தொழுது ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் நிலையை மீட்டு உருவாக்கம் செய்து உலகை வாழ்விக்க வேண்டினர்.

திருவேங்கடவனும் வீரநாராயணபுரத்தில் மன்னனார் ஸந்நிதியில் நித்ய வாஸம் செய்யும் ஈச்வர பட்டாழ்வானுக்கு கஜானனர் அம்சமாக நாதமுனிகள் என்பவராக அவதரித்து திராவிட வேதத்தை கொடுத்தருளுவர் என்று அருளியதற்கு ஏற்ப, முனிவர்கள் வீர நாராயணபுரம் சென்று ஈச்வர பட்டராழ்வாரை ஸேவித்து திருவேங்கடவன் அருளியதை விண்ணப்பித்தனர்.

அவ்வாறே கலியுகத்தில் 3224 வருடங்கள் கழித்த பிறகு சோபக்ருது வருடம் ஆனி மாதம் பௌர்ணமி அன்று அனுஷ நக்ஷத்ரத்தில் புதன்கிழமையில் சேனை முதலியாரின் மந்திரியான கஜானனருடைய அம்சமாக ஈச்வர பட்டர் என்னும் அந்தணருக்கு பிறந்தவராவர் என்று ப்ரபந்நாம்ருதம் கூறும்.

(ஆளவந்தார்க்கு உபதேசம் அருளி வைத்தான்) ஸ்ரீமந் நாதமுனிகளின் குமாரரான ஈச்வரமுனிக்குப் பிறந்தவர் யமுனைத் துறைவராவர். இவர் ஆக்கியாழ்வான் என்னும் வித்வானோடு வாதப் போர் செய்து, அதனைக் கண்ட அந்த தேசத்து ராஜ மஹிஷி "என்னை ஆளவந்தீரோ" என்று அழைத்த தனால் ஆளவந்தார் என்ற பெயர் கொண்டார்.

ஸ்ரீமந்நாதமுனிகள் தம் குமாரரான ஈச்வர முனியிடம், அவருக்கு ஒரு பிள்ளை பிறக்க இருப்பதாகவும் அவருக்கு யமுனைத் துறைவர் என்ற பெயரும் இடச் சொன்னார். மேலும் ஸ்ரீமந்நாதமுனிகள் தம் சீடர்களான உய்யக்கொண் டாரிடம் தாம் அருளிய தர்சன தாத்பர்யங்களையும், குருகைகாவலப்பனிடம் தாம் அருளிய யோக ரகஸ் யங்களின் பொருள் விசேஷத்தையும் யமுனைத் துறைவனுக்கு உபதேசிக்கச் சொன்னார். இது பற்றியே "அருளி வைத்தான்" என்றபடி.

(பானு தெற்கில் கண்டவன் சொல் பல உரைத்தான்) பானு – சூரியன். மதுரகவிகள் வடதேச யாத்ரையின் போது அயோத்யையிலிருந்து வகுள பூஷண பாஸ்கரரான நம்மாழ்வாரை ஒரு திவ்ய ஒளியாகக் கண்டவர். எனவே "பானு தெற்கில் கண்டவன்" என்றபடி. அந்த மதுரகவிகள் அந்த திவ்ய ஒளியைக் கண்டு ஏதேனும் கிராமமோ நகரமோ வேகிறதோ, காட்டுத்தீயோ என்று சந்தேகித்து இரண்டு மூன்று நாள் அப்படியே கண்டு, பகலில் தூங்கி இரவில் அந்த ஒளி வரும் திக்கை நோக்கி நடந்து வழியில் வரும் திருத்தலங்க ளெல்லாம் ஆராய, இறுதியில் திருக்குருகூரில் வந்து அங்கு உறங்காப்புளி நிழலிலே நம்மாழ்வாரைக் கண்டு அவரைப் பேச வைத்து, அவர் அருள் பெற்று, அவரைப் பற்றி "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்னும் பிரபந்தமருளினது பற்றி "அவன் சொல்" என்றபடி.

"ஸ்ரீமந் நாதமுனிகள் ஆழ்வார் திருநகரியில் பராங்குச தாஸரிடம் இருந்து மதுரகவிகள் சொல்லான கண்ணிநுண் சிறுத்தாம்பைப் பெற்று பன்னீராயிரம் தடவை அநுஸந்தித்ததனால் "சொல் பல உரைத்தான்" என்றவாறு.

வாழித்திருநாமம் வளரும்...


**வாசகர்களே...**

**ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்திய வாசம் செய்யும் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்களுடைய வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அதாவது ஸ்வாமியின் திருலீலைகளை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக அதை எழுதி ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

*எங்கள் முகவரி :*
**பிரதான ஆசிரியர்,**
**"ஸப்தகிரி", தி.தி.தே.,**
**கபிலத்தீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507.**
**0877- 2264543, 2264359.**



# சுரக்காய்


தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390

தமிழாக்கம் : திருமதி வி.உஷா, 99850 02156


***************

நம் இயற்கை அன்னை உலகத்தில் உள்ள மக்களின் ஆரோக்கியத்தைக் காப்பதற்காக எண்ணற்ற தாவரங்களை நமக்கு வழங்கியுள்ளாள். அவற்றில் சில உணவுப் பொருள்களாகவும், சில மருந்துகளாகவும் பயன்படுகிறது.

*"பஞ்ச பூதத் மகே தேஹே ஆகார:*
*பாஞ்ச பௌதிக*
*விபக்வ பஞ்சதா சம்மக்*
*ஸ்வானுகுணான் அபிவர்தயேத்"*

பஞ்ச பூதங்களின் அடிப்படையில் உணவாக தயாரிக்கப்பட்டு அதனை உட்கொண்டு, உடலின் உள் சென்று பலவித மாற்றம் அடைந்து உடம்பு வளர்ச்சி, பாதுகாப்பு, சக்தி மற்றும் மருத்துவ குணத்தைத் தந்து உடலை பாதுகாக்கிறது.

உணவுப் பொருள் மட்டுமல்லாமல், மிக்க மருத்துவ குணம் கொண்டு குறைந்த விலைக்குக் கிடைக்கப் பெறுவது சுரைக்காய். இக்காய் அனைவருக்கும் எளிதாகக் கிடைக்கப் பெறும். சுரைக்காய் குடுவைப் போன்றதாகவும், நீளமானதாகவும் இருக்கும்.

ஆங்கிலத்தில் Bottleguard என்றும், இந்தியில் லௌகி என்றும் அழைக்கப்படும். இதனுடைய அறிவியல் பெயர் லாஜிநேரியா சிசிரேரியா என்பர். குகுர்பிடேசி என்ற தாவர குடும்பத்தைச் சேர்ந்தது.

சுரைக்காயில் சாம்பார், சட்னி, பொறியல், ஹல்வா போன்றவற்றை தயார் செய்யலாம். இளையதாக உள்ள சுரைக்காய் உண்பதால் நிறைய நன்மைகள் உள்ளன.

சுரைக்காய் உடம்பிற்கு நல்ல குளிர்ச்சியைத் தரும். சிலருக்கு இந்த காயை உட்கொள்வதால் கபம் ஏற்படும். அந்நேரத்தில் 200 மி.லி. தண்ணீரில் அரை டீஸ்பூன் சீரகப் பொடியை சேர்த்து கொதிக்க வைத்து பின்னர் வடிகட்டி சர்க்கரை கலந்து குடிப்பது நல்லது.

பல விதமான வியாதிகளுக்கு மருந்தாகப் பயன்படும் சுரைக்காயைப் பற்றி அறிந்து கொள்வோம்.

### சிறுநீரகக் கோளாறுகளைக் குறைக்க :

நாள்தோறும் ஒருமுறை 200 மி.லி. நீரில் தோல் நீக்கிய சுரைக்காய் பேஸ்ட் 10 கிராம், அரை டீஸ்பூன் சீரகம் மற்றும் கொத்தமல்லி, அரை டீஸ்பூன் பனங்கற்கண்டு ஆகியவற்றைக் கலந்து 100 மி.லி. நீராகும் வரை சுண்டக் காய்ச்சி ஆறிய பின் வடிகட்டி குடித்து வந்தால், சிறுநீரகம் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சல், சிறுநீரகத்தில் இரத்தம் வருதல் போன்ற உபாதைகள் நீங்கும். சர்க்கரை வியாதி உள்ளவர் பனங்கற்கண்டை நீக்கி மீதியுள்ள பொருட்களை சேர்த்து குடிக்க வேண்டும்.

### உடல் எடை குறைய :

காலை வெறும் வயிற்றில் 100 மி.லி. சுரைக்காய்சாற்றில் 25 மி.லி. நீர், 1 கிராம் பட்டைப் பொடி மற்றும் 1 கிராம் மஞ்சள், 3–4 சிட்டிகை உப்பு மற்றும் மிளகுப் பொடி சேர்த்து நன்கு கொதிக்க வைத்து, ஆறிய பின் வடிகட்டி குடிக்க வேண்டும். இவ்வாறு குடிப்பதால் பசியைக் கட்டுப்படுத்தி உடல் எடை

குறைந்து கெட்ட கொழுப்புகள், இருதயக் கோளாறுகள் நீங்கும். இரத்தக் குழாய்கள் சீராகப் பணிபுரியும்.

**இளநரை நீங்க :**

வாரத்திற்கு 2 அல்லது 3 முறை தேவையான அளவு சுரைக்காய் பேஸ்ட்டுடன் நெல்லிப் பொடியை சேர்த்து முடிக்கு பூசி, 1 மணி நேரம் கழித்து தலைக்குளியல் செய்தால் இளம் வயதில் ஏற்பட்ட நரை குறையும்.

**காலரா, வயிற்றுப் போக்கினால் ஏற்பட்ட சோர்வு குறைய :**

சுரைக்காய் ரசம், இளநீர் போன்றவற்றை சம அளவு எடுத்துக் கொண்டு, மருத்துவர் கொடுத்த மருந்துடன் இந்த ரசங்களை அவ்வப்போது குடித்து வந்தால் நீரிழிவினால் ஏற்பட்ட சோர்வு குறையும். 10 நிமிடத்திற்கு ஒரு முறை இந்த திரவத்தை 30–60 மி.லி. அளவு எடுத்துக் கொள்ள வேண்டும்.

**உடம்பின் சூடு குறைய :**

நாள்தோறும் ஒரு முறை 250 மி.லி. நீரில் சுரைக்காய் மேல் உள்ள தோலை பொடியாக நறுக்கி 100 கிராம் எடுத்துக் கொண்டு, அதில் பாசிப் பருப்பு 10 கிராம் கலந்து அரைமணி நேரம் ஊற வைத்து, 100 மி.லி. நீர் ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து, இறக்கி, ஆறிய பின் வடிகட்டி குடித்தால் சூடு குறையும். தாகம், உடல் எரிச்சல், கண் எரிச்சல், காய்ச்சல் போன்றவைகளும் குறையும்.

**தூக்கமின்மை :**

200 மி.லி. சுரைக்காய் ரசம், 50 மி.லி. எள் எண்ணெய் உடன் சேர்த்து நன்கு கொதிக்க வைத்து, ரசம் முழுவதும் எண்ணெய்யாக ஆன பின் இறக்கி, வடிகட்டி தலைக்கு பூசும் தைலமாகப் பயன்படுத்தினால் நல்ல உறக்கம் வரும். சருமம் வரண்டு இருத்தல், கண் எரிச்சல் குறையும், கால் மற்றும் கைகளுக்கு பூசினால் வெடிப்பு நீங்கும்.

**தோல் எரிச்சலாக இருந்தால் :**

நாள்தோறும் ஒருமுறை சுரைக்காய் ரசத்தை பூசிக் கொண்டால் பாதம் மற்றும் கைகளில் ஏற்படும் எரிச்சல், உடம்பில் ஏற்படும் அரிப்பு ஆகியவை குறையும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநுஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக் கோயிலில் இடம் பெற்றுள்ளனர்.

☎ 0877–2264592.

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக் கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும். ☎ 0877–2264584.

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷியால் இங்குள்ள சிவலிங்கம் தோற்றுவிக்கப்பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப் படுகிறது. ☎ 0877– 2264587.

**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலை வில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ 0877–2264586.



# ஸ்ரீமத் பகவத்கீதை

**தெலுங்கு மூலம் :**
**திரு.கே.விஸ்வநாத சாஸ்திரி**

**தமிழாக்கம் :**
**டாக்டர் சி. கோவிந்தசாமி, 94445 82356**

நற்குணங்கள் எத்தனையோ உண்டு. சில நேரங்களில் நாம் தானம் செய்கிறோம். பிறருக்குப் பயன்படும் படியான நல்ல வேலைகளை சேவை மனப்பான்மையோடும் செய்கிறோம். ஒருவருக்கு ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோ தானம் செய்கிறோம்.

தானம் செய்வது நல்ல குணமே. ஆனாலும் தானம் செய்யும் போது நாம் மனதில் என்ன நினைக்கிறோம் என்பதை ஒரு முறை சிந்தித்துப் பார்த்தோமேயானால், "நான் கொடுக்கின்றேன். அவன் பெற்றுக் கொள்கிறான்" என்ற நோக்கமே மேலோங்கி நிற்பதை அறிய முடிகிறது.

அதுமட்டுமின்றி அவர்களைக் கண்டு முகம் சுளித்து நிற்கிறோம். ஏதோவொரு ஆணவம் நம்மிடம் நிறைந்து விடுகிறது. அவனுடைய வாழ்க்கையை அப்படியே நிலை நிறுத்தி விட்டதாக எண்ணி அந்த காசை அவன் முன் வீசியெறிகிறோம். நாம் இரண்டு குணங்களும் கலந்த கலவையாக இருக்கிறோம். அவை நற்குணம். துர்க்குணம். உபகாரம் செய்கிறோம். செய்த பின்பு என்ன செய்கிறோம்? பொதுவாக அவனை தூசிக்கிறோம்.

அப்படியானால் உபகாரம் செய்வது எதற்கு? பின்பு அவனை தூசிப்பது எதற்கு? என்னும் கேள்வி எழும்? இதுபோன்று எத்தனையோ நற்குணங்களும் துர்க்குணங்களும் ஒன்றோடு ஒன்று கலந்து விட்டமையால், அவை ஒன்றைவிட்டு ஒன்றை பிரிக்க முடியாதளவு ஒன்றிவிட்டுள்ளது. அவை ஒரு நாள் ஒன்றோடு ஒன்று சண்டையிட்டுக் கொண்டு துர்க்குணம் வெற்றி பெறுமேயானால் நாம் அரக்கர்களாகி விட்டோம் என்பதே பொருள். இப்படிப்பட்ட நிலை எப்பொழுதும் வரவே கூடாது.

எனவே, மனிதர்கள் யாவரும் மிகவும் எச்சரிக்கையாக இருந்து, தேவகுணமாகிய நற்குணங்களை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அரக்கர்களின் அசுர குணமாகிய துர்க்குணம் நமக்கு வேண்டவே வேண்டாம். மனிதன் நாளும் நற்குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். உள்ளம் ஒரு கோயிலாக வேண்டும். அதற்கும் மேலாக உலகத்தை எல்லாம் கட்டிக் காக்கும் இறைவன் அடியை சென்றடைதல் வேண்டும்.

பரமாத்மாவை அறிதலே, நம் நோக்கமாக இருத்தல் வேண்டும். இதை உத்தேசித்தே ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா நமக்கு பகவத்கீதை என்னும் அமுதத்தை உபதேசித்தார் என புரிந்து கொள்ள வேண்டும். அர்ச்சுனன் என்பவன் ஒரு தோற்றம் மாத்திரமே. அர்ச்சுனனிடம் உள்ள குணங்கள் அனைத்தும் நம்மிடமும் உள்ளன.

அர்ச்சுனனிடத்தில் உள்ள குண நலன்கள் என்னவென்றும், அவன் எவ் விதமாக எல்லாம் ஆலோசித்தான் என் றும் மிக விரிவாக இந்த அத்தியாயத்தில் அறிந்து கொள்ளவிருக்கிறோம்.

நாம் கூட அதுபோன்ற சூழ்நிலை யில் அவ்வாறே ஆலோசிப்போம் என நினைத்தே நம் அனைவருக்கும் பயன் படும் விதமாக பரமாத்மா உபதேசம் செய்துள்ளார்.

இந்த உபதேசம் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்கு மட்டுமே செய்தார். கிருஷ்ண பரமாத்மா, அர்ச்சா மூர்த்தியாக விளங்கும் திருவேங்கட முடையான் நமக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிறார் என்ற பாவனையில் கேட்போமேயானால், அதன் உள் கருத்துக்கள் யாவும் உள்ளவாறே அறிந்து கொண்டால் ஸ்ரீகிருஷ்ணர் உபதேசித்த ஸ்ரீமத்பகவத்கீதை என்னும் அமுதத்தை நாம் முழுமையாக அருந்தியவராவோம்.

அதனால் நமக்கு நன்மைகள் உண் டாகும். இது முதன்மையான கருத்தாகும். சஞ்ஜயனிடம் போர்க்களத்தில் யார் யார் என்னென்ன செய்தார்கள்?

அங்கு என்ன நடந்து கொண்டு இருக்கிறது என்று கேட்டான் திருதராஷ்டிரன். அதற்கு சஞ்ஜயன் சமாதானமாக இவ்வாறு கூறினான்.

*"த்ருஷ்ட்வா து பாண்டவானீகம் வ்யூடம் துர்யோதனஸ்ததா*
*ஆசார்யமுபஸங்கம்ய ராஜா வசனமப்ரவீத்"*

என்று சஞ்ஜயன் கூறினான். அங்கு படைகள் ஆயத்தமாக நின்று கொண்டிருக்கிறது. உன்னுடைய மகன் துரியோதனன் துரோணாசாரியரிடம் சென்று, அவரிடம் உரையாடிக் கொண்டி ருக்கிறான் என்றார். அப்பொழுது திருதராஷ்டிரன் "இவன் அவரிடம் என்ன கேட்டுக் கொண்டிருக்கிறார். குருவாகிய அவர் இவருக்கு என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்" என்று கேட்டார்.

*"தர்மக்ஷேத்ரே குரு க்ஷேத்ரே சமவேதா யுயுத்ஸவ:*
*மாமகா: பாண்டவச் சைவ கிமகுர்வத சஞ்ஜய"*

பாண்டவர்களும், என் மகன்களும் அனைவரும் ஒன்று கூடி என்ன செய்தனர் எனக் கேட்டார் திருதராஷ்டிரன். அதற்கு மிகவும் சாதுர்யமாக பதில் அளிக்க முற்பட்டார் சஞ்ஜயன். துரியோதனனை தன் பேச்சில் முன்னிலைப்படுத்தி கூறலானான். இங்கு நாம் சஞ்ஜயனின் அறிவுக் கூர்மையை கவனிக்க வேண்டியுள்ளது. ராஜ சேவகனாகிய சஞ்ஜயனின் அறிவுக் கூர்மையை கவனிக்க வேண்டியுள்ளது. ராஜ சேவகனாகிய சஞ்ஜயன் அவரது கேள்வியின் உள்நோக்கத்தை புரிந்து கொண்டதாலேயே அவ்வாறு சொல்லலுற்றான். ராஜா! "தர்ம க்ஷேத்ரே" என்றார் அல்லவா! தர்ம க்ஷேத்ரம் என்றால் என்ன?

*தொடரும்...*

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 58க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | ஞ் | 2 ச | நே | ய | ர் | ண | ஷ் | ரு | 3 கி | | |
| லி | 4 ப | ம் | பா | 5 சு | | | ம் | ன | கா | ம | 6 ரா |
| ங் | | பா | ம் | ர | ன | 7 வா | யு | கு | 8 மா | ர | ன் |
| க | | தி | 9 அ | ஸை | ன் | ம | னு | 10 அ | ரு | | |
| ண | வி | சீ | ஞ் | ர | 11 சி | 12 அ | யோ | த் | தி | | ம் |
| ம் | 13 சீ | தை | ச | | றி | ன் | ண | ஷ | 14 பீ | 15 வி | ன |
| ன | ஞ் | | னை | ன் | ய | ரி | 16 சூ | | ம | ஸ் | க |
| வ | 17 ச | 18 ரா | | | தி | தி | 19 வை | | ன் | வ | த |
| க | ணி | ம | டா | 20 சூ | ரு | ந் | கு | ழி | ண | ரூ | கா |
| சோ | | தூ | | | வ | 21 ம | ண் | யா | ஜீ | ப | ங் |
| 22 அ | ன் | த | ர | 23 ப | டி | | ட | னை | ர் | ம் | 24 ல |
| 25 ரா | ம | ன் | | | ர் | ப | ம் | 26 க | 27 அ | | |

அலசுவோம்...... அறிவோம்....

ஆதிகாவிய நாயகர்களை......

# கைகேயி

**இராமாயண காவியம் உருவானதற்கு**
**"கருப்பொருளான" கதாபாத்திரம்**

**திரு. சத்யதாரா, சென்னை, 99445 61775.**



இராமாயண காவியம் உருவானதற்கு "கருப்பொருளான" கதாபாத்திரம், அவள்தான் "கைகேயி". கேகய தேசத்தின் மன்னன் அசுவபதி. அசுவபதி அபாரமான போர்த்திறமையும், அபூர்வமான ஜ்யோதிஷ கலையும் அறிந்தவன். மற்றொருவரின் பூர்வ ஜன்மத்தினை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றவன். தன்னைப் போலவே அனைத்து சக்தியும் உள்ள ஒரு மகள் வேண்டும் என்று தணியாத ஆவல் கொண்டான். கலைகளுக்கு அதிபதியான சரஸ்வதி தேவியினை வழிப்பட்டான். சரஸ்வதி தேவியும் காட்சி கொடுத்து, தனது அம்சமாகவே ஒரு மகள் பிறப்பாள், என்று அருளினாள்.

அதே போல பிறந்த பெண் குழந்தைக்கு சரஸ்வதி என்று பெயரிட்டான். கைகேயினுடைய உண்மையான பெயர் சரஸ்வதி என்பதாகும். கைகேயி தனது தந்தைக்கு இணையான ஞானத்தினையும், திறமையும் கொண்டு இருந்தாள். கேகய நாட்டு ராஜகுமாரி என்ற அடையாளம் கொண்டதால் கைகேயி என்ற பெயரே வழக்கத்தில் நிலை கொண்டது. ஒரு முறை தசரத மன்னன் தனக்கு புத்திர பாக்யம் உண்டா என்று அறிந்து கொள்ள கேகய நாட்டிற்கு வந்து கைகேயினை சந்திக்கிறான். அவளது திறமையில் மயங்கி அவள்பால் மையல் கொண்டான். சில நிபந்தனைகளுடன் அசுவபதி அவளை தசரதனுக்கு மூன்றாவது மனைவியாக, மணமுடித்து கொடுக்கிறான். (இந்த நிலையில் தான், அசுவபதி தசரதனிடம் தனது மகளின் வயிற்றினில் பிறக்கும் புத்ரனுக்கே இளவரசனாக பட்டம் சூட்ட வேண்டும் என்று கோருவதாக, சில அறிஞர்களின் கருத்து).

மாமன்னன் தசரதனின் விசேஷ அபிமானத்தை பெற்றவளாக இருந்தாள் கைகேயி. இதற்கு பல காரணங்கள் உண்டு. தேவேந்திரனுக்கும் சம்பராசுரன் என்ற ஒரு அரக்கனுக்கும்

நடந்த போரில், தசரதன் தேவேந்திரனுக்கு உதவுகிறான். அவ்வமயம் கைகேயி அவனது ரத சாரதியாக இருக்கிறாள். போரில் ஒரு நிலையில், தேரின் அச்சு முறிகிறது. மஹா திறமைசாலியான கைகேயி தனது ஆட்காட்டி விரலை, அச்சாணியாகப் பயன்படுத்தி உதவுகிறாள். (ஒரு முறை கைகேயி, துர்வாச மஹ ரிஷியை, தனது சுட்டு விரலை நீட்டி ... இவர்தான் துர்வாசர் என்று காட்டுகிறாள். சினம் கொண்ட துர்வாசர் அவளது நீட்டிய விரல் இரும்பாக மாறட்டும் என்று சாபமிடுகிறார். இந்நிகழ்வே அவளது விரல் அச்சாணியாக உதவியது என்று ஒரு கிளைக்கதை உண்டு). சம்பராசுரன் அழிகிறான். இத்தருணத்தில், அகமகிழ்ந்த தசரதன், தனது ஆசை மனைவிக்கு இரண்டு வரங்கள் தருவதாக வாக்களிக்கிறான். ஆனால் கைகேயி அந்த வரங்களை...தேவையான பொழுது பெற்றுக் கொள்வதாகக் கூறுகிறாள். (பின்னாட்களில், இந்த இரண்டு வரங்களின் படியே, ஸ்ரீ ராமன் 14 ஆண்டுகள் வனவாசம் செய்யவும், பரதன் நாடாளவும்....ஆன வரலாறு நிலை கொள்கிறது)

மாமன்னன் தசரதன் செய்த புத்ரகாமேஷ்டி யாகத்தினை தொடர்ந்து, செய்கிறான். அதனைத் தொடர்ந்து, கௌசல்யா தேவிக்கு ஸ்ரீராமனும், கைகேயிக்கு பரதனும், சுமித்ரைக்கு லக்ஷ்மணன் – சத்ருக்னன் என்ற இரட்டையரும் பிறந்தனர். ஆண்டுகள் நகர்ந்தன. அரசகுமாரர்கள் வளர்ந்தனர். ஒரு நிலையில், மன்னன் தசரதன், நாடெங்கும் முரசறைந்து, நகரினை அலங்கரித்து விழாக்கோலம் கொள்ளுமாறு ஆணைகள் பிறப்பித்தான். ஒரே நாள் இரவில் அயோத்யா விழாக்கோலம் பூண்டது. ......ஓரிடத்தில் மட்டும்.....ஒரு வித்யாசமான நிகழ்வு... வேதனையையிற்றுவிக்கிறது.... விரிவானதொரு வரலாற்றுக்கு வித்திடும் நிகழ்வு தீயவர்களை அழித்து நல்லவர்களை காக்க, ஒவ்வொரு அவதாரத்திலும் ... பெருமாளின் சங்கல்பம் ... கடவுள் காட்டிய வழி..! என எவ்வாறு வேண்டுமானாலும் நாம் உருவகம் கொள்ளலாம்... கைகேயினுடைய உற்ற தோழி மந்தரை. உடல் கூனி இருந்ததால், கூனி என்று அழைக்கப்பட்டாள். கேகய நாட்டில் இருந்து விவாஹம் ஆன நாள் முதல் கைகேயினுடன் அயோத்யா வந்து விட்டாள்.

விவாஹ சமயத்தில் மன்னன் அசுவபதி தசரதனிடம் கூறியிருந்த நிபந்தனையை நினைவு படுத்தினாள். பல வித கோணங்களில் பேசி கைகேயியின் தூய்மையான உள்ளத்தை களங்கப்படுத்தினாள். அதன் விளைவாக கைகேயி இரண்டு வரம் கோரினாள். 1) ஸ்ரீராமனுக்கு பதில் பரதன் நாடாள வேண்டும் 2) ஸ்ரீராமன் பதினான்கு ஆண்டுகள் மரவுரி தரித்து வனவாசம் செல்ல வேண்டும். வாக்கு தவறுவதில்லை என்ற விரதம் கொண்டிருந்த மன்னன் தசரதன், வரங்களை கொடுக்கும் நிலை உருவானது. இந்த கட்டத்தில் இருந்து தான் ஸ்ரீராமாவதாரத்தின் நோக்கம் .... இராமாயண காவியமாக உருவாகிறது. எந்நிலையிலும், ஸ்ரீராமபிரானால் ஒரே மாதிரி குறையாத அன்புடன் நேசிக்கப்பட்ட நக்ஷத்திர கதாபாத்திரம் கைகேயி.

அலசுவோம் தொடர்ந்து மேலும் பல இதிஹாஸ கால நாயகர்களை....!





# சிறந்த கொடையாளி யார்?

மகா பாரதப் போரில் பாண்டவர்கள் பக்கம் பலவித சகாயங்களை செய்தான் கண்ணன். பாண்டவர்களின் வெற்றியை நினைத்து எல்லோரும் சந்தோஷமாக யிருந்தனர். ஆனால் கண்ணன் மட்டும் முகம் வாட்டத்துடன் கண்ணீர் விட்டு உட்கார்ந்து இருந்தான். போருக்கு முன் துரியோதனனின் வீரம், கர்ணனின் கொடைத் தன்மையைப் பற்றி பாண்டவர்களிடம் அடிக்கடி கண்ணன் புகழ்ந்து பேசுவார். இதனால் தர்மனுக்கு கோபம் வருவதில்லை. பொறாமையும் கிடையாது, ஆனால் அர்ச்சுனனுக்கு மட்டும் எதிர் கட்சியினரைப் பற்றி கண்ணன் பேசுவது பிடிக்காது. ஏன் என்றால் தர்மனை விட கர்ணன் அப்படி என்ன கொடை வள்ளல். என் வீர வில்லுக்கு சமமானவனா கர்ணன்? துரியோதனன்? என்ற கர்வம் அர்ச்சுனன் மனதில் உண்டு.

அர்ச்சுனன் நிலைமையை உணர்ந்த கண்ணன் அர்ச்சுனா உண்மையில் பார்க்கப் போனால் உலகிலேயே சிறந்த கொடையாளி கர்ணன் தான். அது உனக்குத் தெரியாது. இன்னம் அந்த கொடையாளி சாகவில்லை. போர்க் களத்தில் உயிர் இன்னும் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. வா அர்ச்சுனா என்று போர் நடந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான் கண்ணன். ஒரு வயதான கிழவன் போல அந்தணர் வடிவில் சென்றார். பூமி எங்கும் ரத்தம் தோய்ந்த மண். எங்குப் பார்த்தாலும் பிணக்குவியல்கள் பார்ப்பதற்கு பயங்கரமான தோற்றம். இந்த நிலையில் கர்ணன் இருக்குமிடம் சென்றனர். கண்ணன் கர்ணனின் தலையை நிமிர்த்தினார். இந்த நிலையிலும், சுவாமி! அந்தணரே! நீர் யார்? இந்த வயதான நேரத்தில் என்னை பார்க்க வந்திருக்கின்றாய்! உனக்கு ஏதாவது பொருள் வேண்டுமா? என்று கர்ணன் கேட்டான். ஆம் கர்ணா இந்த போர்க்களத்தில், அதுவும் உயிர் பிரியும் நிலையில் நீ இருக்கின்றாய். நான் உன்னிடம் எந்த பொருளும் கேட்க மனமில்லை என்றார் கண்ணன். ஐயா! தாங்கள் தன்னை நாடி வந்த பொருள் என்னவென்று தயவு செய்து கூறுங்கள். அந்த பொருளை என் வீட்டிற்குச் சென்று என் மனைவியிடம் கேட்டு பெற்றுக் கொள்ளலாம் என்றான். கர்ணா! நான் வயதானவன். இந்த கொம்பை ஊன்றிக் கொண்டு உன் வீடு வரை செல்ல என்னால் முடியாது என்றார். அந்தணரே நீ நாடி வந்த பொருள் என்னவென்று சொல்லும். ஒன்றுமில்லை ஒரு கடுகு அளவு தங்கம் எனக்கு வேண்டும். அதைத்தான் நான் எதிர்ப்பார்த்தேன் என்றார் கண்ணன்.

யோசித்து பார்த்தான் கர்ணன். ஏற்கனவே ஒரு பல் தங்கத்தால் கட்டியிருந்தான். அது தற்போது நினைவுக்கு வந்தது. தன் உடலை சிறிது சிறிதாக நகர்த்தி கொண்டு போய் ஒரு கல்லை எடுத்து பற்களை இடித்து தங்கத்தை எடுத்தான். சுவாமி இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றான். இரத்தம் தோய்ந்த தங்கத்தை அந்தணர் வாங்க மறுப்பதை உணர்ந்து கொண்டார். உடனே தன் உடலை நகர்த்தி கொண்டு போய் அருகில் இருந்த வில்லை எடுத்து தன் தலையால் இழுத்து வருண அஸ்த்திரத்தை எய்தினான். நீர் பூமியில் கொட்டின. தங்கத்தை நீரால் கழுவினான். இப்பொழுது பெற்றுக் கொள்ளுங்கள் என்றான். அந்தணர் வேடம் மாறி தன் சுயரூபத்தில் காட்சியளித்தார். கர்ணா உனக்கு வேண்டிய வரங்களைக் கேள் என்றார். சுவாமி! மூவுலகாதிபதியான ஸ்ரீமந்நாராயணனே எனக்கு சேவை சாதிக்கும் போது வேறு வரம் வேண்டாம். தங்கள் திருவடிகளில் சேர்த்துக் கொள்ளும் பாக்கியம் பெற்றேன் என்றான். இதையெல்லாம் பார்த்த அர்ச்சுனன் உலகில் சிறந்த கொடையாளி கர்ணன் தான் என்று உணர்ந்து கொண்டான்.




செல்வி எஸ். ஜெயஸ்ரீ, இளையாண்டிபட்டு.

# பால அனுமன்

சித்திரக் கதை

கதை மூலம் : திரு. டி. ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.
சித்திரம் : திரு. கே. துளசி பிரசாத்




லோகத்திற்கு தீங்கு விளையப்போகிறது. தேவதைகள் அனைவரும் சென்று பிரம்மாவை பிரார்த்தித்தனர்.
தந்தையே! தாங்களே காத்தல் வேண்டும்
அனைவரும் வாயுவின் குகைக்குச் சென்றனர். வாயுவிடம் பிரம்மா...
மகனே! உன் இயக்கத்தை நிறுத்தினால் படைப்பிற்கே ஆபத்து.
சரி. என் அனுமனின் நிலைமை?
பிரம்மா தன் அமிர்த கரத்தால் தடவி அனுமனுக்கு சுய நினைவை கொணர்ந்தார்.
என் பழம் எங்கே
என் பிரம்மாஸ்திரம் உன்னை எதுவும் செய்யாது.
தாடை மீது வஜ்ராயுதத்தால் அடியுண்ட இந்த பாலகன் அனுமன் என்று புகழப்படுவான் என்றார் பிரம்மா.
தேவதைகளின் அஸ்திரங்களும் இவனை ஏதும் செய்யாது.
வாயுவும் அமைதியுற்று தனது இயக்கத்தைத் தொடர்ந்தார்.
நல்ல வேளை பிழைத்தோம்.
அஞ்சனை தனது குழந்தையை தூக்கிக் கொண்டு முத்தமிட்டாள்
குழந்தாய்! அனுமனே! சிரஞ்சீவியாய் திகழ்வாய்.
அடுத்த இதழில் மற்றொரு கதையைப் பார்த்து படித்து மகிழ்வோம்!
முற்றும்.

## பல்சுவை பகுதி

1. திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பிரபந்தங்கள் எத்தனை?
   அ) நான்கு ஆ) ஆறு இ) எட்டு
2. நம்மாழ்வாரின் அவதார திரு நட்சத்திரம் எது?
   அ) பூரம் ஆ) கேட்டை இ) விசாகம்.
3. ஸ்ரீ ராமாநுஜர் எத்தனை சிம்மாசனாதிபதிகளை நியமித்தார்?
   அ) 72 ஆ) 74 இ) 76
4. அஹோபிலம் என்று அழைக்கப்படும் திவ்ய தேசம் எது?
   அ) திருக்காட் கரை ஆ) திருவாய்பாடி இ) திருச்சிங்கவேள்குன்றம்
5. குபேரனுக்கு பெருமாள் அருள் செய்த திவ்யதேசம் எது?
   அ) திருக்கோளுர் ஆ) திருக்கூடல் இ) திருப்பேரை

**விடைகள்**
1) ஆ, 2) இ, 3) ஆ, 4) இ, 5) அ

### பொருத்துக...

1. மீன் - அ. கம்சன்
2. வாமனன் - ஆ. இராவணன்
3. ஆமை - இ. பலிசக்ரவர்த்தி
4. கிருஷ்ணர் - ஈ. கூர்மாவதாரம்
5. இராமர் - உ. மச்சாவதாரம்

1.உ, 2.இ, 3.ஈ, 4.அ, 5.ஆ.



### தெரிந்து கொள்ளலாமே...

ஸர்வதர்மாந்பரித்யஜ்ய
மாமேகம்சரணம் வ்ரஜ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ
மோக்ஷயிஷ்யாமி மாசுச ॥

கிருஷ்ண சரம சுலோகமான இதுதான் கீதையின் முடிந்த பொருள்.


### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும் ...

அனுமன் தியானம் என்று ஈடுபட்டு பக்தியில் “ஸ்ரீராமா” எப்பொழுதும் செய்பவர் ஸ்ரீராம.

அனுமன் ஸ்ரீராம பக்தியில் ஈடுபட்டு எப்பொழுதும் “ஸ்ரீராமா” என்று தியானம் செய்பவர்.

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...

### விடுகதை பகுதி...

1. பச்சை பெட்டியில் வெள்ளை முத்துகள் ?
2. பூவிற்குள் பூ வைத் திருக்கும் பூ?
3. பெட்டியை திறந்தால் பூட்ட முடியாது?

1.வெண்டைக்காய், 2.வாழைப்பூ, 3. உதேங்காய்



Edited and Published on behalf of T.T.Devasthanams by **Prof. K.Rajagopalan**, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. P. Ramaraju,** M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.

# அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

## 2021 ஜீன் 19 முதல் 27 வரை



**19-06-2021 சனிக்கிழமை**

பகல் : துவஜாரோஹணம் – இரவு : பெரிய சேஷ வாகனம்

**20-06-2021 ஞாயிற்றுக்கிழமை**

பகல் : சிறிய சேஷ வாகனம் – இரவு : ஹம்ஸ வாகனம்

**21-06-2021 திங்கட்கிழமை**

பகல் : சிம்ம வாகனம் – இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**22-06-2021 செவ்வாய்க்கிழமை**

பகல் : கல்ப விருக்ஷ வாகனம் – இரவு : சர்வபூபால வாகனம்

**23-06-2021 புதன் கிழமை**

பகல் : மோகினி அவதாரோத்ஸவம் – இரவு : கருட வாகனம்

**24-06-2021 வியாழக்கிழமை**

பகல் : அனுமத் வாகனம் – இரவு : யானை வாகனம்

**25-06-2021 வெள்ளிக்கிழமை**

பகல் : சூரியப்பிரபை வாகனம் – இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**26-06-2021 சனிக்கிழமை**

பகல் : திருத்தேர் – இரவு : குதிரை வாகனம்

**27-06-2021 ஞாயிற்றுக்கிழமை**

பகல் : சக்கர ஸ்நானம் – இரவு : துவஜாரோஹணம்



ஜாபாலி ஆஞ்சநேயர், திருமலை